ISSN 1391-9504




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ரொபர்ட் நொக்ஸுக்கு இங்கிலாந்தில் வரவேற்பு

**கி.பி** 1679 இல் மன்னார் அரிப்பு எனும் இடத்தில் இருந்து வருகை தந்த நொக்ஸ் மற்றும் ஸ்டீவன் ஆகியோரை அன்புடன் வரவேற்ற ஒல்லாந்தர்கள் அவர்களுக்குத் தங்குவதற்கு உரிய வசதிகளைச் செய்து கொடுத்தனர். பின்னர் கப்பல் ஒன்றின் மூலம் பத்தேவியாவிற்கு அனுப்பி வைத்தனர். பதினெட்டு வருடங்களாக இலங்கையில் சிறையில் வாடிய இக்கைதிகள் இருவரும் அங்கிருந்து இங்கிலாந்திற்குச் சென்றனர். அங்கு இரண்டாம் சார்ள்ஸ் மன்னரால் அவர்களுக்கு பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. ரொபர்ட் நொக்ஸ் அதன்பின் இலங்கை குறித்து 'ஹிஸ்டரிக்கல் ரிலேஷன்ஸ் ஒஃப் சிலோன்' (Historical Relations of Ceylon) எனும் தலைப்பில் நூல் ஒன்றை எழுதி வெளியிட்டார். அந்தவகையில், 'டெனியல் டிஃபோ' எனும் எழுத்தாளரால் எழுதப்பட்ட கெப்டன் சிங்கல்டன் (Capton Singleton) எனும் புத்தகத்திற்குப் பல தகவல்கள் ரொபர்ட் நொக்ஸின் நூலில் இருந்தே பெற்றுக்கொள்ளப்பட்டது.

பிற்காலத்தில் ரொபர்ட் நொக்ஸ் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தில் சேவையாற்றுவதற்காக சென்றார். அத்துடன், அடிமை வர்த்தகத்திலும் ஈடுபட்டார். இராஜசிங்க மன்னனுக்கு செய்தி ஓலை ஒன்றையும் அனுப்பினார். இவ்வேளை, கண்டியில் சிறையில் இருந்த ஆறு சிறைக்கைதிகள் காவலர்கள் மூலம் தப்பி ஓடினர். அவர்கள் தப்பி ஓடி ஒல்லாந்தரிடம் தஞ்சம் புகுந்தனர்.

ஹர்பட் மற்றும் ரொவெஸ்டர் எனும் கப்பல்களில் இருந்து வெளியேறியவர்கள் உள்ளிட்ட மேலும் பல கைதிகள் சிங்களப் பெண்களை விவாகம் செய்தனர். அவர்கள் கண்டிப் பிரதேசத்தில் நிரந்தரமாக வசிக்கத் தொடங்கினர். இக்காலப்பகுதியில் ஆங்கிலேயர் இரண்டாம் இராஜசிங்க மன்னனுடன் சமாதான ஒப்பந்தமொன்றை செய்து கொள்ளப் பெரிதும் முயன்றனர். எனினும், அது நிறைவேறவில்லை.

ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும் கீழைத்தேய நாடுகளில் பாரிய அளவில் வர்த்தகம் மேற்கொள்வதற்காக வர்த்தக சங்கங்களை அமைத்தது போலவே, பிரான்சியரும் பிரெஞ்ச் கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தை அமைத்தனர்.

கி.பி 1664 ஆம் ஆண்டிற்கு முன் இருந்த சங்கங்கள் அரசனின் உதவியுடன் கிழக்கிந்திய வர்த்தக சங்கமாக ஐக்கியம் அடைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் 82 பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பம்

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

யுத்தம் காரணமாக வடக்கில் மூடப்பட்டிருந்த 82 பாடசாலைகளில் தற்போதளவில் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. யுத்தத்தினால் இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து, இம்மாதம் 4 ஆம் திகதி முதல் 82 பாடசாலைகள் கல்வி நடவடிக்கைகளுக்காக திறக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சியில் 5 பாடசாலைகளும் வவுனியா வடக்கில் 21 பாடசாலைகளும் மன்னாரில் 5 பாடசாலைகளும் ஒட்டுசுட்டானில் 22 பாடசாலைகளும் முல்லைத்தீவில் 24 பாடசாலைகளும் மடுவில் 5 பாடசாலைகளும் இவ்வாறு திறந்து வைக்கப்பட்டுள்ளன என வடமாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.



பாடசாலைகளைத் திறந்து வைப்பது தொடர்பான வைபவமொன்று வடமாகாண ஆளுநரின் தலைமையில் அண்மையில் கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்த வைபவத்தின்போது பாடசாலை ஆசிரியர்களுக்கு சைக்கிள்களும் பாடசாலை மாணவர்களுக்கு புத்தகங்கள், சீருடைகள் உட்பட பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன. இப்பாடசாலைகளுக்கு மொத்தம் 943 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர் எனவும் அவர்களின் போக்குவரத்து வசதிகளுக்காக தினமும் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிவரை 6 பஸ்களும் வவுனியாவிலிருந்து கிளிநொச்சி வரை 4 பஸ்களும் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ளதாகவும் வடமாகாண ஆளுநர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாணம், வவுனியாவில் டெங்கு தீவிரம்

## சுமார் 33 பேர் உயிரிழப்பு; 1,524 பேரளவில் பாதிப்பு

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் டெங்கு நோய் தீவிரமாகப் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் இதுவரை சுமார் 11 டெங்கு நோயாளிகள் உயிரிழந்துள்ளதோடு, சுமார் 419 பேரளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், வவுனியா மாவட்டத்தில் இதுவரை சுமார் 22 பேர் உயிரிழந்துள்ளனர் என்பதோடு, சுமார் 1110 பேரளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்காக யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலைகளில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன், பல



மட்டங்களில் தடுப்பு நடவடிக்கைகளிலும் விழிப்புணர்வு நடவடிக்கைகளிலும் சுகாதாரப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர் எனவும் அறியக்கிடைத்துள்ளது.

அவ்வாறே, வவுனியா மாவட்டத்திலும் மக்களை விழிப்புணர்வூட்டும் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அறியவருகின்றது.

# உலகின் உயரமான ஹோட்டல்




உலகின் உயரமான ஹோட்டல் என்ற கின்னஸ் சாதனையுடன் 'ரோஸ் ரைஹான்', இம்மாதம் 6 ஆம் திகதி டுபாயில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

10,000 சதுர அடி நிலப்பரப்பில் 333 மீற்றர் உயரத்திற்கு இந்த ஹோட்டல் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 72 மாடிகளுடன் 482 படுக்கை அறைகளைக் கொண்டுள்ளது. இந்த ஹோட்டலின் 65 ஆவது மாடியிலேயே அதிக எண்ணிக்கையிலான படுக்கை அறைகள் அமையப்பெற்றுள்ளன. காரணம், இங்கிருந்தவாறு அண்மையில் டுபாயில் திறந்து வைக்கப்பட்ட 'பேர்ஜ் கலீஃபா' எனும் உலகின் உயரமான கட்டடத்தை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றமை என்பதனாலாகும்.

இந்த ஹோட்டலின் நிர்மாணப் பணிகள் 2004 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# 'ருபெல்லா' தடுப்பு மருந்து இவ்வருடத்திலிருந்து மீண்டும் வழங்கப்படும்

## தொற்று நோய்ப் பிரிவு தெரிவிப்பு



இவ்வருடத்திலிருந்து மீண்டும் 'ருபெல்லா' தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கொழும்பு தொற்று நோய்ப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் பபா பலிஹவடன தெரிவித்துள்ளார்.

ருபெல்லா தடுப்பூசி ஏற்றியதை அடுத்து வாரியப்பொளை பாடசாலை மாணவியொருவர் மரணத்தை தழுவியதை அடுத்து, அதனை வழங்குவது கடந்த மே மாதம் முதல் இடைநிறுத்தப்பட்டது. எனினும், இலங்கையில் வழங்கப்படுகின்ற ருபெல்லா தடுப்பு மருந்தானது தரத்தில் குறைவானதன்று என உறுதியானதை அடுத்து, இந்நடவடிக்கை தொடர்ந்தும் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பெண்ணொருவருக்கு கர்ப்ப காலத்தில் ருபெல்லா எனும் ஜேர்மன் சின்னம்மை நோய் தாக்குவதற்கான அபாயம் இருப்பதனால், அந்த நோய்த்தாக்கத்துக்கு ஆளாகும் பெண் பிரசவிக்கும் குழந்தை அங்கவீனமாக, புத்திசுவாதீனமாக அல்லது வேறு ஏதும் குறைபாடுகளுடன் பிறக்கலாம் என தொற்று நோய்ப் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். எனவே, பாடசாலை மாணவிகள் ருபெல்லா தடுப்புமருந்தை ஏற்றிக்கொள்வது மிகவும் முக்கியமானது எனவும், அதனால் இந்த வருடத்திலிருந்து அந்த நடவடிக்கை மீண்டும் செயற்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

60 நாட்களில் ஆங்கிலத்தை கற்றுக் கொள்ளுங்கள்
இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழிகாட்டி
E.L.I யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.
BASIC / SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH
அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத.வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது. (வயது கட்டுப்பாடு தேவையில்லை)
60 நாட்கள் முடிவில் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் ஒன்று வழங்கப்படும்.
இலவச T.Shirt ஒன்றும் Phone Sim English Book. என்பன இலவசம்

பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய T.SHIRT ஒன்று Phone Sim Card மற்றும் 30 Easy way English புத்தகம் ஒன்று இலவசமாக வழங்கப்படும்
இலவச Phone Sim
மேலதிக விபரங்களுக்கு பெயர்.முகவரியை 0777-220002 க்கு SmS செய்யுங்கள்
இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்
மேலதிக விபரங்களுக்கு 20/- பெறுமதியான 2 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.
THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம் உருவான விதம்

**தங்கம் இப்போது மூலதனத்தின் பெறுமதிக்காகக் கணிக்கப்படுகின்றபோதும் ஆதிகாலத்தில் பூஜைக்குரிய பொருளாகவே இருந்ததாக வரலாறு கூறுகின்றது. பின்னர் உயர்ந்த உலோகம் இலங்கும் பொலிவு ஆகியவற்றால் ஆபரணச் செய்கையில் முதலிடம் பெற்றது. அன்றும் இன்றும் அணிவோருக்கு கவர்ச்சியளிப்பதோடு மூலதனப் பெறுமதியையும் குறையாமல் வைத்திருப்பதே தங்கத்தின் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.**





## ஆரம்பத் தோற்றம்

உலகில் பணம் உருவாகுமுன் அதன் செயற்பாட்டை தங்கமே வகித்தது. ஒன்பதாம் நூற்றாண்டில் இது சீனாவில் நிகழ்ந்ததாக அறியமுடிகிறது. அங்கு இது பணமாகப் பாவிக்கப்பட்டது மாத்திரமல்ல கூடுதல் தொகையில் வைப்பிலிட நிறுவனமும் செயற்பட்டது. பெறுமதிக்கு பற்றுச்சீட்டும் வழங்கப்பட்டது. அச்சீட்டு தங்கத்துக்குப் பகரமாக மாறி உலகம் முழுவதும் வியாபித்தது. இதுவே தற்போதிருக்கும் பணமுறைக்கும் வங்கிமுறைக்கும் ஆரம்ப வழிகாட்டி எனக் கருதப்படுகிறது.



## மேலும் விரிவாக்கல்

16 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் பணப்பரிமாற்றத்துக்காகக் கடதாசித்தாள் உபயோகிக்கப்பட்டதாகவும் தங்கக்காசு, தங்கக்கட்டி ஆகியவற்றின் மதிப்புக் கூடியதும் பணத்தாளின் உபயோகம் வீழ்ச்சியுற்றதாகவும் கூறப்படுகின்றது. (கடதாசியும் சீனாவின் கண்டுபிடிப்பே என்பது குறிப்பிடத்தக்கது) அக்காலத்தில் தங்கத்தோடு, வெள்ளியும் பெறுமதி கணிக்கப்படும் பொருட்களாக அமைந்திருந்தன. எனவேதான் 1833 இல் பரிமாற்றத்துக்காகத் தங்கம், வெள்ளிக்காசுகளை வெளியிட இங்கிலாந்து வங்கிக்கு பிரிட்டிஷ் அரசு அனுமதி வழங்கியிருந்தது.

1844 இல் அந்த ஷரத்தின்படியே பெறுமதிமிக்க தங்கத்தால் சதங்களையும் ரூபாக்களையும் வெளியிட இங்கிலாந்து வங்கிக்கு அதிகாரம் கிடைத்தது. இது கோல்ட் ஸ்டேன்டார்ட் (தங்கப் பெறுமானம்) என அழைக்கப்பட்டது. அதன் படிதான் பணத்தின் பெறுமதியைத் தங்கத்தின் பெறுமதியுடன் கணிக்கலாம். தேவையானால் தங்கத்தைப் பணமாகவும் பணத்தை தங்கமாகவும் சம பெறுமதியுடன் பரிமாற்றம் செய்யலாம்.

## இடையில் ஒரு இடையூறு

1900 ஆம் ஆண்டுகளில் இங்கிலாந்தின் 4.25 பவுன் ஓர் அவுன்ஸ் சுத்தமான தங்கத்துக்கு நிகராக இருந்தது. இதே மதிப்பீடு 1945 வரை குறையாமல் காணப்பட்டது. இரு நாடுகளுக்கிடையில் பெறுமதி நிர்ணயிக்கப்படுவது அவற்றுக்கு மத்தியில் ஓர் அவுன்ஸுக்கான பொருளாதாரத்தின் அடிப்படையிலாகும். இத்தகைய மதிப்பீட்டு முறை 1875 முதல் 1914 வரை உலகெங்கும் வியாபித்திருந்தது. இதனால், பெயருக்கேனும் பணப்புழக்கம் செய்வதில் பல நாடுகள் திண்டாடின. தம் வசமிருந்த தங்கத்தின் தொகை அளவுக்கே பணத்தாளை வெளியிட வேண்டியிருந்ததால் தேவைக்கேற்ப பணத்தாள் அச்சிட முடியாதிருந்தது.

## அமெரிக்காவின் கொள்முதல்



தங்கமும் பணமும் 16 ஆம் நூற்றாண்டில் சரிசமமாக இருந்த போதும் தற்போது தங்கத்துக்குச் சரிசமமாக அதே பெறுமதியுடன் பணத்தாள் வெளியிடும் நாடு உலகில் இல்லை. 50 வருடங்களுக்கும் அதிகமாக ஓர் அவுன்ஸ் தங்கம் டொலர் 20 அளவில் மட்டுப்படுத்தியிருந்த அமெரிக்கா, 1934 இல் 35 டொலர் என விலை அதிகரித்திருக்கிறது. இதனால், உலகின் பல நாடுகள் தம் கைவசமிருந்த தங்கத்தைக் கூடுதல் விலைக்கு அமெரிக்காவுக்கே விற்றன.

## அமெரிக்க கையிருப்பு

இதன் காரணமாக இரண்டாம் உலக மகா யுத்தத்தின் முடிவில் அமெரிக்காவிடம் பெருந்தொகையான தங்கம் கையிருப்பில் இருந்தது. அமெரிக்க அரசின் முழு நிதிக்கையிருப்பிலும் 100% க்கு 75 வீதம் தங்கமே இருந்தது. தற்போதும்கூட உலக நாடுகளின் பணத்தாள்களுக்குச் சமமான தங்கம் அமெரிக்காவிடம் இருப்பதாகவே கூறப்படுகிறது. உலகில் அமெரிக்காவே தங்கக் கையிருப்பில் முதலிடம் வகிக்கிறது. ஜேர்மன் இரண்டாம் இடத்தை வகிக்கிறது. உலக முதலீட்டு நிதி நிறுவனம் மூன்றாம் இடத்தில் உள்ளது. தற்போது அமெரிக்காவிடம் 8.134 மெட்ரிக் தொன் தங்கம் உள்ளது. உலக முதலீட்டு நிதி நிறுவனத்திடம் 3-127 மெட்ரிக்தொன் தங்கம் உள்ளது.



## கையிருப்புத் தொகைகள்

உலகிலேயே சீனாவில்தான் தங்கம் அதிகமாக உற்பத்தியாகிறது. எனினும், தங்கப் பற்றாக்குறையால் இறக்குமதியும் ஆகிறது. அங்கு கடந்த வருட உற்பத்தி 282 தொன்களாகும். தங்கத்தின் உலக அளவு 100 க்கு 10.3 என்றால் சீன உற்பத்தி 1.9 ஆகும். உலக நாடுகள் தமது வெளிநாட்டுச் செலாவணியில் ஒரு பங்கைத் தங்கமாகவே வைத்திருக்கின்றன. அநேகமாக, அது அந்நாட்டின் நிதிச்சட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டதாக இருக்கலாம். இலங்கையிலும் 5-3 மெட்ரிக் தொன் தங்கம் இருப்பதாகக் கூறுகிறார்கள். இது வெளிநாட்டுக்கான இலங்கையின் பொருளாதாரத்தில் 3-8 க்கு சமமானதாகும். இது இலங்கையில் அல்ல, வெளிநாட்டிலேயே வைப்புச் செய்யப்பட்டுள்ளது.



## அந்நிய செலாவணியில் தங்கமும் பணமும்

இலங்கை மத்திய வங்கியின் அந்நியச் செலாவணியில் தங்கம் மட்டுமல்ல; அமெரிக்க டொலர், ஐரோப்பிய நாடுகளின் யூரோ, இங்கிலாந்தின் ஸ்டேர்லிங் பவுன், அவுஸ்திரேலிய டொலர் யாவும் அடங்கும். 2008 இல் இலங்கை மத்திய வங்கியின் அந்நியச் செலாவணியாக 153 மில்லியன் டொலர் சம்பாதித்திருக்கிறது.



2 Dollar Coin "Toonie" | 1 Dollar Coin "Loonie" | 50 Cent Coin | 25 Cent Coin "Quarter" | 10 Cent Coin "Dime" | 5 Cent Coin "Nickel" | 1 Cent Coin "Penny"

இதுவரை உலகில் கண்டுபிடிக்கப்பட்ட தங்கம் 158,000 தொன்கள் என்றே மதிப்பிடப்பட்டிருக்கிறது. பணத்தின் தோற்றப்பட்டுக்கு தங்கமே மூலகாரணம். அதுபோல் பணத்தின் பெறுமதியைக் கணிக்கும் சாதனமும் தங்கமேயாகும். அத்துடன், பணத்தின் பெறுமதியைக் கணிப்பதில் வெள்ளிக்கும் அதிக பங்கு இருக்கிறது.

**ஏ.ஜே.எம். நிழாம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2036 இல் பூமி மீது மோதவுள்ள ராட்சத விண்கல்

2036 ஆம் ஆண்டு பூமி மீது ராட்சத விண்கல்லொன்று மோத இருக்கிறது. அவ்வாறு அந்த விண்கல் மோதினால் பூமியில் பேரழிவு ஏற்படும் என்றும் அஞ்சப்படுகிறது. இதனைத் தீப்பிடித்து எரிந்து விடுவதும் உண்டு. அளவில் சிறியவைதான் இப்படி எரிந்து சாம்பலாகின்றன. அதுவே, பெரிய கற்களாக இருந்தால், பூமியில் விழுவதும் உண்டு.

அந்தவகையில், அடுத்து வரும் 26



ஆண்டுகளில் பூமிக்கு மேற்கூறிய ஆபத்தை ஏற்படுத்தப்போவது 'அபோபிஸ்' (Apophis) என்னும் விண்கல் ஆகும். அளவில் பெரிய இந்த விண்கல்,2004 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இது 2036 ஆம் ஆண்டு பூமியின் சுற்றுப்பாதைக்குள் நுழைந்து பூமியில் மோத இருக்கிறது. இந்த எரிகல் 1150 அடி விட்டம் கொண்டது. இது பூமி மீது மோதினால், அது மோதும் இடத்தில் உயிரினங்கள் இல்லாமல் போகும் அளவுக்கு பாரிய அழிவுகள் ஏற்படும். பிரான்ஸ் நாட்டின் பரப்பளவுக்கு பூமியில் பாலைவனம் ஏற்படும் என்று அஞ்சப்படுகின்றது.

இது 2029 ஆம் ஆண்டளவில் பூமிக்கு மிக அருகில் அதாவது, 30 ஆயிரம் கிலோமீற்றர் தொலைவில் வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதனை அடுத்துவரும் 7ஆண்டுகளில் குறித்த விண்கல் தன் பாதையை மாற்றிக்கொண்டு,பூமி மீது மோதும் என்றும் கருதப்படுகின்றது. அத்துடன், 45 ஆயிரத்தில் ஒன்று என்ற விகிதத்தில் இந்த விண்கல் பூமியுடன் மோதுவதற்கான




சாத்தியம் இருப்பதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு நடப்பதை தவிர்ப்பதற்காகவே ரஷ்யா மேற்படி நடவடிக்கையை எடுத்து வருகிறது.அதன்படி, விண்கலத்தை விண்வெளிக்கு அனுப்பி, அதை 'அபோபிஸ்' விண்கல் மீது மோதச் செய்வது என்று ரஷ்யா திட்டமிட்டுள்ளது. இது தொடர்பாக அமெரிக்காவின் நாஸா, ஐரோப்பா விண்வெளி ஆராய்ச்சிக் கழகம், சீன விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் ஆகியவற்றுடன்கூடி நாங்கள் ஆலோசனை நடத்த இருப்பதாக ரஷ்ய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தின் சிரேஷ்ட அதிகாரிகளில் ஒருவரான அனாட்டோலி பிரிமோகோவ் தெரிவித்துள்ளார்.

தடுப்பதற்காக விண்கலமொன்றை விண்வெளிக்கு அனுப்பி, அந்த விண்கல்லில் அதை மோதச்செய்து, விண்கல்லை அதன் பாதையில் இருந்து விலக்குவதற்கு ரஷ்யா திட்டமிட்டுள்ளது.


விண்வெளியில் சுற்றி வரும் லட்சக்கணக்காக விண்கற்களில் சில எப்போதாவது புவி ஈர்ப்பு விசையால் ஈர்க்கப்பட்டு, பூமியை நோக்கி வருவது உண்டு. வரும் வழியில் அவற்றில் சில நடுவானில்



# அதிவிரைவு தொலைநோக்கி

விண்வெளியில் கோள்கள் மட்டுமல்லாது லட்சக்கணக்கான விண்கற்களும் சுற்றி வருகின்றன. அவற்றில் பல ஒளிராதவை. இவை சாதாரண தொலைநோக்கியில் தென்படாது. அந்த வகையில், கண்களுக்கு புலப்படாத நட்சத்திரக்கூட்டங்கள் சில அண்மையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இவை நவீன தொலைநோக்கியூடாக கண்டறியப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நவீன தொழில்நுட்பமான இன்ஃப்ராரெட் வசதியுடன் கூடிய ஒரு புதிய தொலைநோக்கியை 'நாஸா' விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ளனர். இது வைஸ் (Wise) எனப்படுகின்றது. இது Widefield Infrared Survey Explorer என்பதன் சுருக்கமாகும். இந்த புதிய தொலைநோக்கி மிகமிக வேகமாகச் செயல்படக் கூடியது. புலப்படாத எரிகற்களால் பூமிக்கு ஏற்பட இருக்கும் ஆபத்தை இதன்மூலம் முன்கூட்டியே கண்டுபிடித்து, அறிவித்துவிடக் கூடியதாக இருக்கும் என்கின்றனர் விஞ்ஞானிகள்.



இத்தொலைநோக்கியானது பல ஒளியாண்டுகள் தூரத்துக்கு அப்பால் உள்ள புலப்படாத பொருட்களையும் கதிர்வீச்சு முறையில் கண்டுபிடித்துவிடும். இந்த முறையில் இதுவரை கண்ணுக்குப் புலப்படாத நட்சத்திரம், எரிகல் கூட்டத்தை இத்தொலைநோக்கி அண்மையில் கண்டுபிடித்துள்ளது. இவை நமது சூரியக் குடும்பத்தின் அயல் நட்சத்திரக்கூட்டமான 'பிராக்சிமா செஞ்சுரி' நட்சத்திரக் குடும்பத்துக்கு முன்பாகவே அமைந்திருக்கின்றன. இந்த எரிகல், நட்சத்திரக்கூட்டத்துக்கு பழுப்புக் குள்ளர்கள் (Brown Dwarfs) என்று பெயரிடப்பட்டுள்ளது. இவை குளிர்ந்த நிலையில் இருக்கும் எரிகற்களாகும்.

# செவ்வாய் செல்லவுள்ள 'குரங்குகள்'

செவ்வாய்க் கிரகத்தில் கடல் இருப்பதாக அண்மைய ஆய்வொன்றினூடாக நம்பப்படுகிறது. அத்துடன், பூமியில் விழுந்த எரிகல் ஒன்றை ஆய்வு செய்தபோது அதில் உயிரினப் படிமங்கள் இருந்ததாக அண்மையில் மேற்கொள்ளப் பட்ட மற்றுமொரு ஆய்வு உறுதி செய்துள்ளது. அந்த எரிகல் செவ்வாயில் இருந்து விழுந்திருக்கக்கூடும் என்றும், இதனால் செவ்வாயில் உயிரினங்கள் இருக்கலாம் எனவும் நாஸா கருதுகின்றது.

இந்த இரண்டு விடயங்களும் விண்வெளி விஞ்ஞானிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளன. இதனால், ஏற்கனவே திட்டமிட்டுள்ள 3 ஆண்டுகால செவ்வாய் பயணம் இன்னும் சூடுபிடிக்கத் தொடங்கியிருக்கின்றது. இதற்காக அங்குள்ள சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப பல்வேறு ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதன்படி, அண்மையில் விஞ்ஞானிகள் சிலர் செவ்வாய்க்குச் செல்லும் மாதிரி விண்கலத்தில் 6 மாத காலங்கள் தங்கி இருந்து, அங்கு பயணிப்பது-இறங்குவது போன்ற பல ஒத்திகைகளை நடத்தி பல ஆய்வுகளைச் செய்துள்ளனர்.

இதுதவிர, மற்றொரு விஞ்ஞானிகள் குழுவை 3 ஆண்டு காலங்களுக்கு ஆய்வுக்கு உட்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன், விண்வெளியின் கதிர்வீச்சினால் மனிதனுக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாகவும் ஆய்வுகள் நடைபெறுகின்றன. கதிர்வீச்சு ஆய்வில் முதலில் எலிகளைப் பயன்படுத்தி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதோடு, இதன்மூலம் ஓரளவு பலனும் கிடைத்திருக்கிறது. இதைவிட சிறப்பான முடிவுகளை எதிர்பார்த்து,






தற்போது Squirrel வகை குரங்குகள் ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டு வருகின்ற அதேவேளை,செவ்வாய்க் கிரகத்துக்கு குரங்குகளை அனுப்புவதற்கு ரஷ்ய விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர்.

இவை விண்வெளியில் பயணிக்கும் போது இவற்றைக் கவனித்துக்கொள்ளும் முழுப் பொறுப்பும் ஒரு ரொபோவிடம் ஒப்படைக்கப்பட இருக்கிறது.

1983 ஆம் ஆண்டில் ரஷ்யாதான் முதன் முதலில் விண்வெளிக்கு குரங்குகளை அனுப்பியது. ஜோர்ஜியாவில் உள்ள 'இன்ஸ்டிடியூட் ஒஃப் எக்ஸ்பெரிமெண்டல் பேதாலஜி எண்ட் தெரஃபி' என்ற ஆராய்ச்சி நிலையம்தான் விண்வெளிப் பயணத்துக்கு குரங்குகளை அனுப்பி வைத்தது. இன்று அதே ஆராய்ச்சி நிலையம்தான் செவ்வாய்க் கிரகத்துக்கு அனுப்புவதற்காக குரங்குகளை வழங்கவுள்ளது. இது தொடர்பாக ஆராய்ச்சி நிலையத்துடன் 'ரஷ்யாவின் கோஸ்மனாடிக் எகடமி' பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. இதற்கிடையில், செவ்வாய்க் கிரகத்துக்கு குரங்கை அனுப்பும் திட்டம் தொடர்பில் ரஷ்யாவிலுள்ள மிருகவதை எதிர்ப்புக் குழு தமது எதிர்ப்பினைத் தெரிவித்து சர்ச்சையைக் கிளப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



எவ்வாறாயினும், செவ்வாய்க்கான 3 ஆண்டு காலத்துக்குட்பட்ட அடுத்த பயணம் விரிவாகத் திட்டமிடப்பட்டிருப்பதுடன், செவ்வாயை சென்றடைவதற்கு 6 மாத காலம்பிடிக்கும் எனவும், அங்கு தங்கி இருக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இரண்டரை ஆண்டு காலங்களுக்கு அங்கு நேரடி ஆய்வு நடக்க இருக்கின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ISBN குறியீடு எ... குறிப்பிந...

**சிறந்த அறிவியல் நூல்கள் எம்மிடம் இருக்கக்கூடிய விலைமதிக்க முடியாத சொத்தாகும். பூமிக்கடியில் இருந்து கிடைக்கக்கூடிய புதையலுக்கு நிகரானதாக அறிவைப் பெறக்கூடிய நூல்கள் கருதப்படுகின்றன. அத்தகைய நூல்களின் மதிப்பை அளவிடும் கருவிகள் எதுவும் இல்லை. ஆனாலும் நூல்களின் தராதரத்தை அளவிடும் குறியீடு இருக்கின்றது.**

**நூல்களில் இரண்டாவது பக்கத்தில் அல்லது கடைசிப் பக்கத்தில் ISBN என்ற குறியீட்டுடன் இலக்கப் பதிவுகள் உள்ளன. நாம் அறியாத நூலின் தராதரத்தை இந்த ISBN குறியீட்டு இலக்கம் நூலுக்கு வழங்குகின்றது. அதன் விபரங்களை அறிந்து கொள்வோம்.**

## நூல்கள் பற்றி அறிஞர்கள்

''சிறந்த அறிவுசார் நூல்கள் இணைபிரியாத நண்பர் போன்றவை'' (மார்ட்டின் பர்குவா டபர்)

''அனைத்து நூல்களும் இரண்டு வகைப்படும். சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ற நூல்கள், என்றைக்கும் பொருத்தமான நூல்கள்'' (ஜோன் ரங்கின்)

''அதிகமான நூல்களை அடுக்கி வைத்துக்கொண்டு அவற்றைப் பயன்படுத்தி அறிவு பெறாத மனிதன் எரியும் மெழுகுவர்த்தியின் அருகில் உறங்கும் குழந்தையைப் போன்றவன்'' (ஹென்றி பீடம்)

## ISBN என்றால் என்ன?

சர்வதேச ரீதியாக நூல்களுக்கு வழங்கப்படும் அங்கீகாரக் குறியீடே இதுவாகும். சர்வதேச தர நூல் இலக்கம் (International Standard Book Number) என்பதாகும். சர்வதேச தராதரப் பதிவில் இருந்து 13 இலக்கங்களைக் கொண்டதாக, 0-9 வரையான இலக்கங்களை உள்ளடக்கியதாக, அரேபிய இலக்கங்களைக் கொண்டதாக உள்ள நூல்களுக்கு குறிப்பிடத்தக்க அந்தஸ்து வழங்கப்படுகின்றது.

## ISBN வழங்கப்படும் நூல்கள்

இந்தக் குறியீடு அனைத்து நூல்களுக்கும் வழங்கப்படுவதில்லை. சர்வதேச தரத்திலான் நூலாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு 42 பக்கங்களுக்கு மேல் இருக்கவேண்டும். அத்துடன், நூலின் பெயர், உள்ளடக்கம், முன்னுரை, முடிவுரை, உசாத்துணை நூற்பட்டியல், அடிக்குறிப்புக்கள் ஆகிய தகவல்களுடன் 42 பக்கங்களுக்கு மேற்பட்டதாக இருந்தால் அது சர்வதேச தரச் சான்றிதழைப் பெறுவதற்கு தகுதியான நூலாகும்.

## ISBN ஆரம்பம்

இதன் வரலாறு 1966 ஆம் ஆண்டு வரை நீண்ட செல்கின்றது. ஜேர்மனியில் பெர்லினில் நூல்கள் வியாபாரம் தொடர்பான இரண்டாவது சர்வதேச மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் சாவதேச தரச் சான்றிதழ் இலக்கம் பற்றிய கருத்து முதன்முதலாக முன்வைக்கப்பட்டது.

இக்காலப்பகுதியில் ஐரோப்பாவில் நூல் வெளியீட்டாளர்கள் தமது அச்சுக் கைத்தொழிலில் கணினி மயப்படுத்தலையும் மேற்கொண்டிருந்தனர். 1966 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில்தான் கணினி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நூல்களைப் பரிசீலனை செய்தல், ஆராய்ச்சி செய்தல் ஆகிய விடயங்களை மேற்கொள்ளும் தேவை உணரப்பட்டது. இந்த தேவையின் பிரதிபலனே நூல்களுக்கான சர்வதேச தரச்சான்றிதழ் இலக்கத்தின் அறிமுகமாகும். இங்கிலாந்தின் புகழ் பெற்ற நூல் பதிப்பக நிறுவனமான விடேகர் என்ற (J.Whitaker & Sons) நிறுவனத்திடம் இதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டது.


1967 இல் அந்த நிறுவனம் நூல்களுக்கான சர்வதேச குறியீட்டு இலக்கத்தை அறிமுகம் செய்தது.

அமெரிக்காவில் 1968 ஆம் ஆண்டு ஆர்.பி.பவுகர் (R.B.Bowker Company) நிறுவனம் இந்த குறியீட்டு முறையை அறிமுகப்படுத்தியது. இதன் பிரதிபலனே இன்று நாம் நூல்களில் காணும் சர்வதேச தராதர குறியீட்டு இலக்கமான ISBN இன் பிறப்பாகும். 1972 ஆம் ஆண்டில் 2108 ஆம் இலக்க சர்வதேச தரச்சான்றிதழ் அமைப்பின் சிபாரிசுக்கமையவே இந்த ISBN அடிப்படையாகி இருக்கின்றது.

## சர்வதேச நிறுவனம்

ISBN தராதர இலக்கத்தொடரை (நூல்களுக்கு) முன்னெடுப்பதற்கு








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனைக்
# கின்றது?

## ISBN இலக்க அமைப்பு

ஆரம்ப அறிமுக இலக்கம் | பிராந்திய குறியீட்டு இலக்கம் | பதிப்பு அடையாள இலக்கம் | நூலின் பெயர் அடையாள இலக்கம் | பரிசீலனை இலக்கம்

ISBN 978-3-16-148410-0

9 783161 484100

5 பகுதிகளாக இந்த இலக்கம் அமைகின்றது.

1. ஆரம்ப அறிமுக இலக்கம்
2. பிராந்திய குறியீட்டு இலக்கம்
3. பதிப்பு அடையாள இலக்கம்
4. நூலின் பெயர் அடையாள இலக்கம்
5. பரிசீலனை இலக்கம்

### 1. ஆரம்ப அறிமுக இலக்கம்

ISBN என்ற ஆங்கில எழுத்துக்கள் 13 தொடர் இலக்கங்களுக்கு முன் காணப்படும். இந்த கருத்துக்களுக்கு அடுத்ததாக சர்வதேச நூல் தராதர நிலையத்தின் ஏற்பாட்டுக்கமைய 978 என்ற இலக்கம் காணப்படும். சர்வதேச இலக்கக் குறியீடு ஐரோப்பிய நிறுவனத்தால் குறிக்கப்படும் 978 என்ற இலக்கம் ISBN குறியீட்டை அடுத்து இடம்பெறும்.

### 2. பிராந்தியக் குறியீடு

இந்த இலக்கம் குறிப்பிட்ட நூலில் பதிப்பிக்கப்படும் நாடு குறிக்கப்படுகின்றது. தேசம், புவியியல் அமைவு, மொழி உள்ளடங்களாக பல விடயங்கள் இந்த இலக்கத்துடன் கவனத்தில் கொள்ளப்படும். சர்வதேச. பதிப்பு பதிவு நிலையத்தில் இருந்து மட்டுமே இந்த பிராந்தியக் (நாடு) குறியீடு வழங்கப்படும்.

உ+ம் : இந்தியாவுக்கான குறியீட்டு இலக்கம் 81 ஆகும்.
இலங்கை 953
சிங்கப்பூர் 9971

இலக்கத்தொடர் இவ்விலக்கம் காட்டுவது அந்தந்த நாடுகளையாகும். இதுபோன்று உலகில் 192 நர்டுகளுக்கும் இலக்கங்கள் உள்ளன.

### 3. பதிப்பு அடையாளம்

இவ்விலக்கத்தின்மூலம் நூலின் பதிப்பகம், வெளியீட்டாளர் எனும் விடயங்கள் குறித்துக் காட்டப்படும் இவ்விலக்கத் தொடர் நீளமானதாகவும் குறுகியதாகவும் அமையலாம். அதிகமான வெளியீடுகளை பதிப்பிக்கும் (அச்சிட்டு வெளியிடும்) நிறுவனங்களுக்கு நீண்ட இலக்கத் தொடர் இருக்கும்.

### 4. நூல் அடையாள இலக்கம்

வெளியீட்டாளரால் வெளியிடப்படும் நூல்களின் அளவு நூல் அடையாளத்தில் காட்டப்படும்.

### 5. பரிசீலனை இலக்கம்

பரிசீலனை இலக்கம் தொடரின் 13 ஆவது இலக்கமாகும். அல்லது இறுதி இலக்கமாகும். ஏனைய 12 இலக்கம் பற்றிய தெளிவின்பின்னரே இறுதியான இவ்விலக்கம் தீர்மானிக்கப்படும். குறிப்பிட்ட நூலுக்குரிய இலக்கத்தின் நம்பகத்தன்மையை பரிசீலனை செய்வது இவ்விலக்கத்தின் மூலமாகும். இது ஒரு தனி இலக்கமாக இருக்கும்.

எமது நாட்டில் நூல்களை அச்சிட்டு வெளியிடும் அநேகமானோர் இவ்விலக்கம் ISBN தொடர்பாக போதிய தெளிவு இல்லாதவர்களாகவே உள்ளனர்.

ஒவ்வொரு நாட்டிலும் நிறுவனம் ஒன்று இருக்கின்றது. இதன் தலைமையகம் ஜேர்மனியின் பெர்லின் நகரத்தில் அமைந்திருக்கின்றது. 2006 ஆம் ஆண்டு முதல் அந்த நிறுவனத்தின் பொறுப்பு இங்கிலாந்தைச் சேர்ந்த Diteur நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. ஆரம்பகாலத்தில் இந்த இலக்கத்தொடர் 10 இலக்கங்களைக் கொண்டதாக இருந்தது. 2007 ஆம் ஆண்டில் இருந்து 13 இலக்கங்களைக் கொண்டதாக இந்த இலக்கத்தொடர் மாற்றியமைக்கப்பட்டது.

## ISBN இலக்கம் வழங்கப்படும் வெளியீடுகள்

அனைத்து வெளியீடுகளுக்கும் ISBN இலக்கம் இருக்கவேண்டியது முக்கியமாகும். ஆனாலும், எமது நாட்டில் சில வெளியீடுகளுக்கு இந்த இலக்கம் இல்லை. ஆனால், அநேகமான நாடுகளில் வெளியீடுகளில் இந்த குறியீட்டு இலக்கம் இல்லாவிட்டால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். ISBN வழங்கப்படும் வெளியீடுகள்.

- அச்சிடப்பட்ட நூல்கள், வெளியீடுகள்
- பல்மொழி வெளியீடுகள்
- கலப்பு மொழி வெளியீடு
- வருடாந்த வெளியீடுகள், நூல்கள், பெயர்ப்பட்டியல்கள், கல்வித் திரைப்படங்கள், வீடியோக் காட்சிகள், பல் அறிவுசார் தகவல் திரட்டுக்கள்.
- பதிவு ஏடுகள்
- வரைபடங்கள்
- அபூர்வ புகைப்பட வெளியீடுகள்
- இலத்திரனியல் ஊடக வெளியீடுகள் இறுவட்டுக்கள், ஒலிப்பதிவு நாடாக்கள், பதிப்புக்கள்.
- கல்விசார், ஆலோசனை வெளியீடுகள்

## ISBN இன் நன்மை

நூல் ஒன்றில் இந்தக் குறியீடு இருக்கவேண்டும் என்ற நியதி இல்லை. ஆனாலும், இந்த தொடர் இலக்கம் இருக்குமாயின் அது சர்வதேச அங்கீகாரமாகும். குறிப்பிட்ட நூல் சர்வதேச சந்தையில் விற்கப்படுமாயின் அதற்கு முழு அளவிலான வரவேற்புக் கிடைக்க வழிசெய்கின்றது. இந்த இலக்கம் இருக்கும்போது வெளியீட்டாளர்கள், நூலகங்கள், தகவல் சேகரிப்போர் போன்றோர் தகவல் சேகரிப்பில், பாதுகாப்பதில் அதிக நன்மையடைகின்றனர்.

- செம்மைபார்த்தல்/ஆசிரிய பீட முகாமைத்துவத்தின்போது.
- உடன்படிக்கைகளின்போது.
- பாதுகாத்து வைத்தல், புள்ளி விபரத்திரட்டு.
- நூலை முன்பதிவு செய்து கொள்வனவு செய்வதில்.
- இலத்திரனியல் ஊடகம் வாயிலாக விநியோக நடவடிக்கைகளின்போது.
- வெளியீடு தொடர்பாக சர்வதேச பிரச்சாரம் மேற்கொள்ள.
- வெளியீட்டு உரிமையை உறுதி செய்துகொள்ள.
- வெளியீட்டு நிறுவனத்தால் ISBN இலக்கத்தை அடையாளம் கண்டுகொள்ள ஆகிய நன்மைகள் உள்ளன.

## இலங்கையில் ISBN அறிமுகம்

ISBN இலக்க முறை 1986 ஆம் ஆண்டு இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டது. இலங்கையில் இந்த இலக்கத்தை வழங்கும் நிறுவனமாக தேசிய நூலக ஆவன சேவைப்பகுதி இருந்து வருகின்றது. நூலின் பிரசுரத்தாரரால் ISBN இலக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்க முடியும்.

## ISBN பெற முடியாத பதிப்புக்கள்

அனைத்து அச்சு மூலமான வெளியீடுகளுக்கும் ISBN வழங்கப்படுவதில்லை. இந்த இலக்கம் பெறமுடியாத அச்சு மூலமான வெளியீடுகள் அனைத்து நாடுகளுக்கும் பொதுவானவையாகும்.

- டயரி, கலண்டர், வாழ்த்து மடல், விளம்பரங்கள், தற்காலிக அச்சுத் தேவைக்கான மூலப் பொருட்கள்.
- அச்சிடப்பட்ட சங்கீத நூல்கள்.
- வார வெளியீடுகள்
- சித்திரங்கள்
- தனிப்பட்ட எழுத்தாவணங்கள்.
- சில வகை ஒலிப்பதிவு நாடாக்கள்
- இலத்திரனியல் கடிதங்கள் (இவை தொடர்பாக வேறு தரச்சான்றிதழ்கள் உள்ளன)

## ISBN தரச்சான்றிதழ்

சர்வதேச தராதர தொடர் இலக்கம் (International Standard Serial Number) என்றழைக்கப்படுகின்றது. பருவகால வெளியீடுகளின் சஞ்சிகைகள் என்பவற்றுக்கு இந்த தரச் சான்றிதழ் வழங்கப்படுகின்றது. இத்தகைய வெளியீடுகள் அதன் பெயர், அட்டை, ஆசிரியர் குழாம், மலர், பருவ இல, வருடம், ஆக்கங்களின் தொகுப்பின் தலைப்பு அல்லது கருப்பொருட்கள் என்பன அவற்றில் இடம்பெறவேண்டும். இந்த இலக்கத்தையும் தேசிய நூலகத்தின் ஆவணக் காப்பகப் பகுதியில் பெற்றுக்கொள்ள முடியும். இந்த இலக்கத்தைப் பெற்றிருந்தால் குறித்த சஞ்சிகையை சர்வதேச ரீதியாகவும் விற்பனை செய்யமுடியும்.

## ISBN இசை இலக்கம்

இது சர்வதேச தராதர இசை இலக்கம் (International Standard Music Number) என்றழைக்கப்படும். இசை தகவல் தொடர்பான வெளியீடுகளுக்கு இந்த இலக்கத்தைப் பெறலாம். இறுவட்டுக்கள், இசை நூல்கள், இசை வெளியீடுகள், இசை ஆக்கங்கள் என்பனவற்றுக்கு இந்த இலக்கத்தைப் பெறமுடியும்.

## வருடாந்த வெளியீடு

வருடாந்தம் வெளியாகும் பதிப்புக்களின் தொகுப்பாக வருடாந்த வெளியீடு அமைகின்றது. ISBN குறியீட்டு இலக்கம் பெற்ற அனைத்து வெளியீடுகளும் இந்தத் தொகுப்பில் உள்ளடக்கப்படும். இது ISBN Publishes Directory என்றழைக்கப்படுகின்றது.

**எம்.எஸ். அமீர் ஹுஸைசன்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநிலை குறித்து ஆராய உலகெங்கும் பயணிக்கும் 'டேரா'



உலகின் காலநிலை மாற்றங்களை அவதானித்தவாறும் சமுத்திரங்களின் மேற்பரப்பிலிருந்து மேலெழும் காபனீரொட்சைட் வாயுவின் சதவீதம் குறித்து ஆராய்ந்தவாறும் சிறிய பாய்மரக் கப்பல் ஒன்று தற்போதளவில் உலகத்தை சுற்றிப் பயணித்துக்கொண்டிருக்கின்றது. இந்தப் படகின் பெயர்தான் 'டேரா'. 'டேரா' என்றால் உலகம் என்று அர்த்தப்படுகின்றது. இந்தக் கப்பலூடாக மேற்கொள்ளப்படுகின்ற கடற்பயண ஆய்வினை 'டேரா ஓஷன்ஸ்' என்று பெயரிட்டுள்ளனர்.

## டேரா

கடந்த வருடம் செப்டெம்பர் 5 ஆம் திகதி பிரான்சின் லொரியெண்ட் நகரிலிருந்து இந்தக் கப்பல் தனது பயணத்தினை ஆரம்பித்துள்ளது. இந்த ஆய்வுக்கான பொறுப்பினை பிரான்ஸ் ஏற்றுள்ளது. மூன்றாண்டுகால பயண இலக்கினை இந்தக் கப்பல் கொண்டுள்ளது. 60 இடங்களில் இக்கப்பல் நிறுத்தப்பட்டு ஆய்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. மூன்றாண்டுகள் பயணித்து, உலகின் சகல சமுத்திரப்பகுதிகளுக்கும் சென்று ஆய்வுகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. உலக நாடுகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஐந்து விஞ்ஞானிகள் இந்தக் கப்பலில் இருந்தவாறு ஆய்வினை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன், கப்பலை இயக்கும் பணிகளுக்காக நான்கு மாலுமிகளும் ஊடகக் குழுவினரும் இக்கப்பலில் உள்ளனர்.

## சமுத்திரங்களின் முக்கியத்துவம்

"உயிர்களின் இருப்புக்கு சமுத்திரங்கள் அவசியமானவை என்பது அனைவரும் அறிவர். எனினும், சமுத்திரங்களின் அமைப்புகள் குறித்து சகல விடயங்களையும் நாம் அறிந்திருக்கமாட்டோம். ஆனால், சமுத்திரங்கள் பற்றிய சகல விடயங்களையும் அறிந்துகொள்வதன் ஊடாக சமுத்திரங்களைப் பாதுகாக்க முடியும்" என 'டேரா ஓஷன்ஸ்' குழுவினர் தெரிவிக்கின்றனர்.


நாம் சுவாசிக்கும் ஒட்சிசனின் அளவில் அரைப்பங்கினை சமுத்திரங்களே உற்பத்தி செய்கின்றன. உலகம் முழுவதிலும் உள்ள சமுத்திரங்களில் உள்ள தாவரங்கள் உள்ளிட்ட உயிரினங்களே ஒட்சிசனை உருவாக்கும் ராட்சதப் பம்பிகளாக செயற்படுகின்றன. வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்டின் அளவு அதிகரிப்பதனால், இந்த சமுத்திர வாழ் உயிரினங்கள் பேரிழப்பினை சந்திக்கின்றன. எனவே, எமது எதிர்காலம் சமுத்திரங்களின் பாதுகாப்பிலேயே தங்கியுள்ளது.

## உயிர் பல்வகைமை

எவ்வாறாயினும், எமது சமுத்திர உயிர் பல்வகைமை குறித்து சரியானதும் துல்லியமானதுமான ஆய்வுகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. வியக்கத்தக்க உயிரினங்கள் பல இங்குள்ளன. அவற்றை மனிதர்கள் சரியாக அறிந்து கொள்ளவில்லை. எனினும், இன்று இந்த உயிர் பல்வகைமைகள் பேரழிவுக்குள்ளாகும் அபாயம் நிலவுகின்றது. இதற்கான பிரதான காரணம் காலநிலை மாற்றம் ஆகும். இதனால், ஏற்படக்கூடிய உலக வெப்பமயமாதல், சூழல் மாசடைதல் போன்ற காரணங்களினால் இந்த அழிவினை சமுத்திர உயிரினங்கள் எதிர்கொள்கின்றன. எனவே, தரைப்பகுதியில் ஏற்படக்கூடிய அழிவுகளைப் போன்றே நீர்ப்பரப்பில் ஏற்பட்டுள்ள நிலைமைகளைக் கருத்திற்கொண்டு, நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கு இவ்வாறான ஆய்வுப் பயணங்கள் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. (இ)

## காலநிலை மாற்றம் பற்றி ஆராய்வதற்காக 'டேரா ஓஷன்ஸ்' தனது பயணத்தினை ஆரம்பித்துள்ளது

*150,000 கி.மீற்றர் தூரம் பயணம் செய்து, உலகின் சமுத்திரங்களில் அதிகரிக்கும் காபனீரொட்சைட் வாயுவின் மட்டம் ஆய்வு செய்யப்படுகின்றது*





| | |
|---|---|
| நோக்கம்: | உலக வெப்பமடைதலானது சமுத்திரங்களின் உயிர் பல்வகைமைக்கும் அங்குள்ள உயிரினங்களுக்கும் மற்றும் பரிணாமக் காரணிகளுக்கும் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்பதை அறிதல். |
| காலம்: | 3 ஆண்டுகள். 60 இடங்களில் நிறுத்தப்படும். |
| அலுவலகக் குழு: | 14 பேர் (தலைமை மாலுமி உட்பட 4 மாலுமிகள், 5 விஞ்ஞானிகள் மற்றும் ஊடகக் குழு) |

AFP 020909 Source : Tara Oceans





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 'கோபி' பாலைவனத்தில் பார்வையைச் செலுத்துவோம்

**உலகில் உள்ள புகழ்பூத்த இடங்கள், மனிதனால் நிர்மாணிக்கப்பட்ட அழியாச்சின்னங்கள் போன்றவற்றை அறியவும் அவை குறித்த பல்வேறு தகவல்களைப் பெறவும், நாம் பெரிதும் விரும்புகின்றோம். அந்தவகையில் உலகின் மிக முக்கிய இடங்களில் ஒன்றும் உலகின் மிகப்பெரிய பாலைவனங்களில் ஒன்றுமான 'கோபி' பாலைவனம் பற்றிய தகவல்களைப் பார்ப்போம்.**

## பாலைவனத்தின் பிறப்பு

14 ஆம் நூற்றாண்டிலேயே ஐரோப்பியர்கள் இந்த பாலைவனத்தைப் பற்றி முதன்முதலாக அறிந்துகொண்டனர். அதாவது, மார்க்கோ போலோ எனும் தேச சஞ்சாரியின் பயணக் குறிப்புகளில் இருந்தே இத்தகவல்களை ஐரோப்பியர்கள் பெற்றனர்.

## வரலாறு

இற்றைக்கு ஒரு லட்சம் (100,000) வருடங்களுக்கு முன்பதாகவே இப்பிரதேசத்தில் மனிதர்கள் வாழ்ந்ததற்கான வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. கல்லினால் செய்யப்பட்ட பல்வேறு வகையான உபகரணங்கள் இங்கு கண்டுபிடிக்கப்பட்டன. அதேபோல், அண்மையில் ரஷ்ய விஞ்ஞானிகளால் இப்பிரதேசம் குறித்த பல்வேறு புவியியல் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்தும் பல்வகையான ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டு வருவதோடு, அதன் மூலம் பல்வேறு சான்றுகளும் கிடைத்துள்ளன.

## கோபி

கோபி என்பது ஒரு மொங்கோலியச் சொல்லாகும். அதன் பொருள் 'நீரற்ற பிரதேசம்' என்பதாகும். சிலர் இதனை 'ஷெமோ' பாலைவனம் என அழைப்பர். 'ஷெமோ' என்பது ஒரு சீனச் சொல்லாகும். 'மணல் வெளி' என்பதே 'ஷெமோ' எனும் சீனச்சொல்லின் கருத்தாகும். இதனை 'மணல் பாலைவனம்' என்றும் அழைப்பர்.

## கோபி பாலைவனத்தைக் கண்டுபிடித்த மார்கோ போலோ

கோபி பாலைவனத்தில் முதன்முதலாகப் பயணம் செய்தவர்கள் வெனிஸ் நகரப் பயணியான மார்கோ போலோவும் அவரது தந்தையுமாகும். 1275 ஆம் ஆண்டு இவர்கள் கோபி பாலைவனத்தைக் கடந்தனர். அதன் பின்னர் கி.பி 1600 ஆம் ஆண்டில் பிரெஞ்ச் நாட்டு கிறிஸ்தவ குருவான ஜூன் பிரான் காயில் ஜெர்பில்லான் என்பவர் இதனைக் கடந்தார். இவர்கள் பயணம் செய்தபோது கோபி பாலைவனத்தில் 'டைனோசிரஸ்' முட்டைகளின் புதைபடிமங்கள் கிடைத்தன.

## அமைவிடம்

இப்பாலைவனம் ஆசியாக் கண்டத்தின் மத்தியில் அமைந்துள்ளது. இது மொங்கோலியா மற்றும் மக்கள் சீனக் குடியரசு ஆகிய நாடுகளூடாக பரந்து விரிந்து கிடக்கின்றது. கோபி பாலைவனத்தின் நீளம் 1930 கிலோமீற்றராகும். அகலமோ 480 கிலோமீற்றர் முதல் 960 கிலோமீற்றர் வரையாகும். இப்பாலைவனத்தைக் கடந்து வீசும் மேற்திசைக்காற்றின் மூலம் பாலைவன மேற்பரப்பில் காணப்படும் மண் சீனாவின் வடமத்திய பிரதேசம் வரை கொண்டு செல்லப் படுகின்றது. அம்மண் அப்பிரதேசத்தில் நிரந்தரமாக காற்றினால் படிய விடப்படுகின்றது.

## பௌதீக தோற்றம்

பௌதீக தோற்றத்தைப் பொறுத்தவரையில் கோபி பாலைவனத்தை பல உப பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

**✱ கா-ஷுன் (Ka-Shun) பிரதேசம்**

இப்பிரதேச மணல் திடலின் சிகரம் 5000 அடிகளாகும். அங்கு மண் சாம்பல் கலந்த கபில நிறமாகக் காணப்படுகின்றது.

**✱ கிழக்கு கோபி பிரதேசம்**

கோபி பாலைவனத்தின் கிழக்குப் பிரதேசம் 2300 அடி முதல் 5000 அடி வரையாகும். இப்பிரதேசத்தின் வருடாந்த மழைவீழ்ச்சி 80 மி.மீற்றராகும். இப்பிரதேசத்தினால் நிலக்கீழ் நீர் புவியின் மேற்பரப்புக்கு மிக அருகில் காணப்படுகின்றது. அதனால், சிறு ஏரிகளும் சில ஊற்றுகளும் ஆங்காங்கே காணப்படுகின்றன.

✱ ஈரலிப்பு அதிகமுள்ள பிரதேசங்களில் உப்புக்கலந்த சேற்று நிலம் மற்றும் முட்புதர்களை காணலாம்.

**✱ ட்ரான்ஸ் அல்தாய் கோபி பிரதேசம்**

இப்பிரதேசம் சூனியமான உயர் கரடுமுரடான மேட்டுநிலத்தைக் கொண்டது. இங்கு ஆறுகளும் ஆற்றுப்பள்ளத்தாக்குகளும் உப்புக்கலந்த சேற்று நிலமும் காணப்படுகின்றன. இப்பிரதேசத்தில் பல்வேறு தரைத்தோற்ற வேறுபாடுகளையும் பல மாறுபட்ட மண் வளங்களையும் காணலாம். இப்பிரதேசத்தின் வருடாந்த மழைவீழ்ச்சி 40 மில்லிமீற்றரிலும் குறைவாகும்.

**✱ சைக்ஷான்ட் பிரதேசம் (Saynshand)**

உப்பு மற்றும் பல்வேறு கனிப்பொருட்கள் பெருமளவில் இப்பிரதேசத்தில் காணப்படுகின்றன. அதேபோல் இப்பிரதேசத்தில் சமீபகாலத்தில் பெற்றோலியமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதனால், எதிர்காலத்தில் பெரும் பெற்றோலிய உற்பத்தி நடவடிக்கைகளுக்கு இப்பிரதேசம் பெரிதும் உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## காலநிலை


கோபி பாலைவனப் பிரதேசத்தில் கண்டக் காலநிலை காணப்படுகின்றது. ஜனவரி மாதத்தில் வெப்பம் $40^0$ ஆகவும் ஜூலை மாதத்தில் வெப்பம் $113^0$ வரை உயர்வடைந்தும் காணப்படும். ஒரே பாலைவனமாயினும் காலநிலை பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபடுகின்றது. மழைவீழ்ச்சியும் மாறுபட்டுக் காணப்படுகின்றது. அதாவது, மேற்கு கோபியில் வருடாந்த மழைவீழ்ச்சி 27 மி.மீற்றராகவும் இதன் வடகிழக்குப் பகுதியில் வருடாந்த மழைவீழ்ச்சி 80 மி.மீற்றராகவும் காணப்படுகின்றது.

## வாழ்வதற்கு தகுந்த இடம்

இப்பாலைவனப் பிரதேசத்தில் ஒரு கிலோமீற்றருக்கு மூவர் என்ற வீதம் மக்கள் வாழ்கின்றனர். இங்கு வாழும் மக்களில் பெரும்பாலானோர் மொங்கோலிய இனத்தவர்கள் ஆவர். சீனர்களும் ஆங்காங்கே வசிக்கின்றனர். அவர்கள் இடையர்களாக வாழ்க்கையை நடத்துகின்றனர். ஒட்டகம், ஆடு, காட்டுக்குதிரை என்பன இவர்களால் வளர்க்கப்படும் பிரதான மிருகங்களாகும்.

**-இரஞ்சித் ஜெயகர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய அரபுக் குடியரசுகள்




**அரசு:** நியமிக்கப்பட்ட ஒரு குழுவைக்கொண்ட கூட்டு முடியரசு. (இது ஏழு குடியரசுகளுடன் 1971 இல் நிறுவப்பட்டது. அவை; அபு தாபி, டுபாய், ஷார்ஜா, அஜ்மன், ஃபுஜைரா, ரஸ் அல்-கைமா மற்றும் உம் அல்-கய்வெய்ன் என்பனவாகும்).

**சுதந்திரம்:** ஐக்கிய ராச்சியத்திடமிருந்து-1971 டிசம்பர் 2.

**அதிபர்** (2004): ஷெய்க் கலீஃபா பின் ஸைத் அல்-நஹ்யான்.

**பிரதமர்** (2006): ஷெய்க் முஹம்மத் இப்ன் ரஷீத் அல்-மக்தூம்

## தரைத்தோற்றம்

அதிகமான பிரதேசங்கள் மணற்பாங்கான தரைத்தோற்றத்தைக் கொண்டுள்ளன.இங்குள்ள பாலைவனங்கள் பெரிய பரப்பளவைக்கொண்டதாகவும் கடற்கரைகள் மணற்குன்றுகளைக்கொண்ட தாகவும் காணப்படுகின்றன. பாரசீக வளை குடாவில் உள்ள கரையோரப் பிரதேசங்கள் மட்டமான சமதரையாக காட்சியளிக்கின்றன. குறிப்பிடக்கூடிய ஆறுகளோ, ஏரிகளோ இங்கு இல்லை. எண்ணற்ற பல தீவுகளும் உட்செல்லும் குறுகிய கடல்குடாக்களும் பாரசீக வளைகுடாப் பகுதியில் காணப்படுகின்றன.



அபு தாபி நகரின் ஒரு பக்க தோற்றம்





அல் ஃபுஜைரா கோட்டை

**அமைவிடம்:** இந்நாடானது அரேபிய குடாநாட்டின் கிழக்குப் பகுதியில் அமைந் துள்ளது.இதன் தென்கரை பாரசீகக்குடாவில் அமைந்துள்ளது. **கிழக்கு**-ஓமான்; **தெற்கு** மற்றும் **மேற்கு**-சவூதி அரேபியா; **வட மேற்கு**-கட்டார் என்பன எல்லைகளாக அமைந்துள்ளன.

**மொத்த நிலப்பரப்பு:** 32,278 ச.மைல் (83,600 ச.கி.மீற்றர்); **நிலப்பிரிவுகள்:** 7 எமிரேட்ஸ் (குடியரசுகள்).

**தலைநகரம்:** அபு தாபி;

**பெரிய நகரம்:** டுபாய்.

**உயர்ந்த சிகரம்:** ஜபல் யிபீர்-5,666 அடி (1,727 மீற்றர்); **தாழ்ந்த மையம்:** பாரசீகக் குடா.

**சனத்தொகை:** 4,798,491.

**நாணயம்:** U.A.E திர்ஹம்






பேர்ஜ் கலீஃபா - உலகின் உயரமான கட்டடம்

**மொழிகள்:** அரபு (உத்தியோகபூர்வ மொழி), பாரசீக மொழி, ஆங்கிலம், ஹிந்தி, உருது.

**இனங்கள்:** எமிரி 19%, ஏனைய அரபு மற்றும் ஈரானியர் 23%, தெற்காசியர் 50%, மேற்கு நாடுகள் மற்றும் கிழக்கு ஆசியாவைச் சேர்ந்தவர்கள் உட்பட ஏனையோர் 8% ஆகும்.

**சமயங்கள்:** இஸ்லாம் 96% (சுன்னி 80%, ஷீயா 16%), கிறிஸ்தவம், இந்து மற்றும் ஏனையோர் 4%.

**எழுத்தறிவு வீதம்** (2003): 78%.

**இணையத்தளக் குறியீடு:** .ae

**சர்வதேச தொலைபேசி இலக்கம்:** 971.

**தேசிய சின்னங்கள்:** மிருகம்-Arabian Horse, பறவை-Peregrine Falcon; (விளையாட்டு, மலர், மரம் என்பன பிரகடனப்படுத்தப்படவில்லை.

## தேசிய கீதம்

isiy biladi,'ais itahidu imaratina
isit lis'abin
dinuhul islamu hadihul quranu
hasnatuki bismillah ya watan....என ஆரம்பமாகின்றது.

## வரலாறு

7 ஆம் நூற்றாண்டில் இப்பிரதேச மக்கள் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவினர். 19 ஆம் நூற்றாண்டில் மஸ்கட் மற்றும் ஓமான் சுல்தான் ஆட்சியின் கீழும் 1853 இல் பிரித்தானியரின் ஆட்சியின் கீழும் வந்தது. 1971 இல் ஏழு குடியரசுகளின் கூட்டமைப்பு உருவாகும் வரையில் இவை 'ட்ருஷியன் ஸ்டேட்ஸ்' என்னும் பெயரில் பிரித்தானியாவின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தன. ஏழு எமிரேட்களின் பரம்பரை ஆட்சியாளர்கள் அடங்கிய சுப்ரீம் கவுன்சிலே ஆட்சி பீடமாகும். சுப்ரீம் கவுன்சில்தான் அதிபரையும் துணை அதிபரையும் தேர்ந்தெடுக்கின்றது.

## கலாசாரம்

இது பல்வகை கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் சமூகத்தைக்கொண்ட ஒரு நாடாகும். 1900 வரை ஈரானியர்களின் கலாசார தாக்கத்திற்கும் 1960 களில் இருந்து இந்தியர்களினதும் பாகிஸ்தானியர்களதும் கலாசார தாக்கத்திற்கு உட்பட்டது. இன்று வாழ்க்கை முறை, இசை, கலை, சமையல், நடை உடை என்பன இஸ்லாமிய மதத்தையும் அரேபிய கலாசாரத்தையும் பெரிதும் பிரதிபலிக்கின்றன.

## காலநிலை

இங்குள்ள பாலைவனப் பிரதேசங்களில் அதிவெப்பமும் உலர்ந்த காலநிலையும் வருடம் முழுவதும் நிலவுகின்றது. மிகச் சொற்ப அளவு மழைவீழ்ச்சி காணப்படும். டிசம்பர்-பெப்ரவரி வரை நிலவும் மாரிகாலத்தில் இதமான குளிர்ச்சி காணப்படும். கோடையில் (ஜூலை-ஓகஸ்ட்) 100° F வரையிலான வெப்பம் காணப்படும்.



அதிபர்



பிரதமர்



## பொருளாதாரம்

**விவசாயம்** (விவசாயத்திற்கு ஏற்ற நிலம் 1%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** பேரீச்சம்பழம், காய்கறிகள், கோழிப்பண்ணை, பாற் பண்ணை உற்பத்திகள், மீன். **தொழிலாளர் தொகை:** 3.065 மில்லியன். (குறிப்பு : 73.9% ஆன மக்கள் வெளிநாட்டவர்கள். இவர்களில் சேவை 78%, கைத்தொழில் 15%, விவசாயம் 7%). **கைத்தொழில்கள்:** பெற்றோலியம் மற்றும் பெற்றோலிய ரசாயனம், மீன்பிடித்தொழில், அலுமினியம், கட்டடப்பொருட்கள், படகு கட்டல், கைப்பணிப் பொருட்கள், புடவை. **இயற்கை வளங்கள்:** பெற்றோலியம், இயற்கை வாயு. **ஏற்றுமதிகள்:** சுத்திகரிக்கப்படாத எண்ணெய் 45%, இயற்கை வாயு, மீன் உற்பத்திகள், பேரீச்சை.



பெரிய பள்ளிவாசல் - அபு தாபி

**இறக்குமதிகள்** (2005): இயந்திரங்களும் போக்குவரத்து சாதனங்களும், ரசாயனப் பொருட்கள், உணவு வகைகள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): ஜப்பான், தென் கொரியா, இந்தியா, தாய்லாந்து, சீனா,ஜேர்மனி, ஐக்கிய ராச்சியம், பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா.



தேசிய இலச்சினை

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்:** பிரதான தொலைபேசி பாவனையாளர் (1998): 15,223 ; **செல்லிடத் தொலைபேசி:** 1 மில்லியன். **வானொலி நிலையங்கள்** (1998): AM 13, FM 7, SW 2. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (1997): 15. **இணையத்தள வழங்குனர்:** 1. **இணையத்தளப் பாவனையாளர்:** 900,000.

## போக்குவரத்து

**புகையிரப் பாதைகள்:** கிலோமீற்றரிலும் குறைவு.

**பெருந்தெருக்கள்:** 4,835 கி.மீற்றர். **துறையும் துறைமுகமும்:** அஜ்மன், அல்-ஃபுஜைரா, டாஸ் தீவு, கவ்ர் ஃபக்கான், மினா ரஷீட், மினா சக்ர், உம் அல் க்வெய்ன்.

**விமான நிலையங்கள்:** 41.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

* **டுபாய்** - கலை கண்காட்சிக் கூடம், டுபாய் மிருகக் காட்சிசாலை, ஜுமைரா கடற்கரைப் பூங்கா. பேர்ஜ் டுபாய்.
* **ஷார்ஜா** - இயற்கை வரலாற்று. அரும்பொருட்காட்சியகமும் பாலைவனப் பூங்காவும், ஷார்ஜா கலை அருங்காட்சியகம் .
* **அபுதாபி**- அல்-ஹுசைன் மாளிகை (வெண்கோட்டை), மகளிர் கைத்திறன் நிலையம்
* **உம் அல்-கய்வெய்ன்** - ட்ரீம் லேண்ட் நீர்ப்பூங்கா
* **அஜ்மன்** - அஜ்மன் அரும்பொருட்காட்சியகம்.
* **அல் ஃபுஜைரா** - அல் ஃபுஜைரா கோட்டை, எய்ன்-அல் மதாப் பூங்கா உள்ளிட்ட இன்னும் பல.
* **ரஸ் அல்-கைமா** - தயா கோட்டை, ஹஜார் மலைகள். தேசிய பூங்கா.



டுபாயிலுள்ள சில போக்குவரத்து சாலைகள்

ட்ரீம் லேண்ட் நீர்ப்பூங்கா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் I


பெயர்: ....................................  நேரம்: 45 நிமிடங்கள்

★ *01 தொடக்கம் 34 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.*


01. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பொருட்களை இரண்டு கூட்டங்களாகப் பிரிக்கலாம்.





02. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.






03. இந்த உருவைப் பூரணப்படுத்துவதற்கு கீழே தரப்பட்டுள்ள பகுதிகளிலிருந்து பயன்படுத்தக்கூடிய பகுதியைத் தெரிவு செய்க.




04. கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்தில் வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.




05.  எனின்  = ? வெற்றிடத்திற்குப் (?) பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.




★ *6 ஆம் வினாவின் பழமொழிக்கான கருத்தையும் 7 ஆம் வினாவின் கருத்துக்கான பழமொழியையும் நன்கு விவரிக்கும் விடையைத் தெரிவு செய்க.*

06. 'இளமையில் கல்வி சிலையில் எழுத்து.

(1) விடாமுயற்சி பலன் தரும்  (2) இளமையில் கற்பதன் சிறப்பு
(3) இளமைத் துணிவு

07. பலர் அறிந்த விடயத்தை மூடி மறைக்க முடியாது.

(1) உலை வாயை மூடலாம், ஊர் வாயை மூட முடியுமா?
(2) இமைக் குற்றம் கண்ணுக்குத் தெரியாது.  (3) கெடுகுடி சொற் கேளாது.

★ *கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்குரிய குறியீடான இலக்கங்களை அவதானித்து, 8 ஆம், 9 ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.*

| | | | |
|---|---|---|---|
| கரம் = 123 | வரம் = 423 | அம்பு = 536 | அருவி = 578 |

08. அரவம் என்னும் சொல்லைக் குறியீடாக எழுதினால்;

(1) 5243  (2) 5743  (3) 5832

09. கரும்பு என்னும் சொல்லைக் குறியீடாக எழுதினால்;

(1) 1236  (2) 1736  (3) 1763

10. முதலில் உள்ள அடைப்பின் பெறுமதிக்குச் சமனான அடைப்பினைத் தெரிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| 36÷3 | (1) 24÷3 | (2) 4+8 | (3) 6×6 |

11.  இவ்வுருவில் காணப்படும் முக்கோணிகளின் ஆகக்கூடிய எண்ணிக்கையைத் தெரிவு செய்க.

(1) 6  (1) 2  (3) 8

★ *12 ஆம் 13 ஆம் வினாக்களில் பிழையான கருத்துக்கள் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.*

12. (1) கிளி ஒரு பறவை. அது ஒரு தாவரவுண்ணி.
(2) நாய் வீட்டைக் காக்கும் பிராணி. அது ஒரு அனைத்தும் உண்ணி.
(3) நத்தை ஒரு பிராணி. அதற்குக் கால்கள் உள்ளன.





13. (1) வெண்டிக்காய் ஒரு வகைக் காய்கறி. வெண்டி எமது நாட்டில் வளர்கிறது.
(2) தென்னை ஒரு மரம். அது ஆணிவேர் உள்ள தாவரம்.
(3) நீலோற்பலம் ஒரு வகைப் பூ. இது இலங்கையின் தேசிய மலர்.

★ *14 ஆம் 15 ஆம் வினாக்களில் காட்டப்பட்டுள்ள எண்கோலங்களை அவதானித்து, வெற்றிடத்திற்கு (?) பொருத்தமான பெறுமானத்தை தெரிவு செய்க.*

14. 

(1) 20  (2) 34  (3) 21

15. 

(1) 34  (2) 26  (3) 29

★ *கீழ்வரும் கூற்றை வாசித்து, 16 ஆம் 17 ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.*

> அப்பாவினதும் மகனினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 50 வருடங்கள் ஆகும். மகன் அப்பாவைவிட 30 வருடங்கள் இளையவன் எனின்;

16. தற்போது மகனின் வயது எத்தனை வருடங்கள்?

(1) 20  (2) 10  (3) 30

17. தற்போது அப்பாவின் வயது எத்தனை வருடங்கள்?

(1) 40  (2) 30  (3) 20

★ *18 ஆம், 19 ஆம் வினாக்களின் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.*

18. சாந்தி, அக்காவுக்கு எழுதியிருந்த கடிதத்திற்கான .............. இன்று கிடைத்தது.

(1) பணம்  (2) பதில்  (3) கட்டுரை

19. ரைட் சகோதரர்கள் 'கிட்டி கொக்' என்ற இடத்திலிருந்தே உலகின் முதல் விமானத்தை ..................ச் செய்தார்கள்.

(1) ஓட  (2) பறக்க  (3) உயர

20. கஜன் பாடசாலையில் நடைபெற்ற விளையாட்டுப்போட்டியின்போது 100m ஓட்ட நிகழ்ச்சியில் நல்ல பயிற்சி பெற்றும் அவனால் அந்த நிகழ்ச்சியில் வெற்றி பெறமுடியவில்லை. இதற்கான காரணமாக அமையக்கூடியது;

(1) விளையாட்டு மைதானம் வேறுபட்டமை
(2) உணவு உண்ணாமல் பங்கு பற்றியமை
(3) கஜனைவிட மிக வேகமாக ஓடக்கூடியவர்கள் இருந்தமை

21. 400 இன் அரைவாசியின் 1/4 உடன் 10 ஐக் கூட்டும்போது கிடைக்கும் எண் யாது?

(1) 50  (2) 60  (3) 40

22. 31 தொடக்கம் 36 வரையுள்ள எண்ணும் எண்களை எழுதும்போது இலக்கம் 3 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?

(1) 7  (2) 6  (3) 5

23. நான்கு வருடங்களுக்கு முன்னர் நவீனின் வயது 4 வருடங்களாகும். அப்போது அவனின் அம்மாவின் வயது அவனின் வயதைப்போல் ஐந்து மடங்காகும். தற்போது நவீனின் அம்மாவின் வயது நவீனின் வயதின் எத்தனை மடங்கு?

(1) 5 மடங்கு  (2) 4 மடங்கு  (3) 3 மடங்கு

24. 36 உடன், அதன் அரைப்பங்கையும் அரைப்பங்கின் அரைவாசியையும் ஒன்றையும் கூட்ட வரும் எண் யாது?

(1) 63  (2) 64  (3) 100

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது உடலைக் காக்கும் 'சருமம்'

**இயற்கை எமது உடலுக்குப் பாதுகாப்பான உறையொன்றை இட்டுள்ளது. அதுதான் நமது சருமம். அந்தவகையில், உடலைப் பாதுகாக்கின்ற கவசமாக அல்லது உறையாக 'சருமம்' திகழ்கின்றது. இத்தகைய சிறப்புமிகு சருமத்தைப் பற்றிய சில விரிவான விடயங்களை இங்கு ஆராய்வோம்**

## எமது உடலின் பெரிய பொறி

எமது உடலின் மிகவும் பெரிய பகுதியாக அமைந்திருப்பது சருமம் அல்லது தோல் எனலாம். இத்தகைய சருமம் தேவைக் கேற்ப தடிப்பாகவும் மென்மையா கவும் அமைந்து, எமது உடலின் பாதுகாப்புக்கான மேல் கவசமாக செயற்படுகின்றது.

## 'சருமம்' நமக்குச் செய்யும் உதவிகள்

உடலின் நேர்த்தியான அழகிற்கு சருமம் இன்றியமையாததாகும். உடலுக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய சூரியக் கதிர்கள், கிருமிகள், தூசுகள் என்பன புகாவண்ணம் சருமம் பாதுகாப்பளிக்கின்றது. அவ்வாறே, எமது உடலினுள் உள்ள கழிவுகளை வியர்வையாக வெளியேற்றுவதற்கும் சருமமா னது முக்கிய பங்களிப்பைச் செலுத்துகின்றது. அத்துடன், உடலின் வெப்பநிலையைப் பாதுகாத்து சமநிலையைப் பேணுவதுடன், ஐம்புலன் உணர்வுகளைக் கொண்டதாக சருமத்தின் மேல்பகுதி திகழ்கின்றது. தொடுகை மற்றும் இதர உணர்வுக் கடத்தலை மேற்கொள்ளும் பணியையும் சருமம் மேற்கொள்கின்றது.

## சருமத்தின் இரு படலங்கள்

சருமம், பார்வைக்கு உடலின் முடிபகுதியாக-கவசமாகக் காட்சி தந்தாலும், உண்மையில் அது இரண்டு படலங்களாக அமைந் திருக்கின்றது.

**1. மேற்றோல்**

மேற்றோலானது கலங்களால் ஆனவை. அந்தக் கலங்கள் இறந்த-உலர்ந்த தன்மைகளைக் கொண்டவை. இவை நாம் வாழ்கின்ற சுற்றாடலுக்கு ஏற்ப இசைந்து கொடுக்கும் தன்மை கொண்டவை. இதன் மேற்பகுதி மெல்லிய கலங்களால் ஆனதால், எமது கண்களுக்குப் புலப்படா விட்டாலும் 27 நாட்களுக்கு ஒருமுறை மேற்றோல் புதிதாக உருவாவதாக உடற்கூற்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

அந்தவகையில், நீங்கள் குளிக் கும்போது அழுக்குகளாகப் படிந் துள்ள தூசு மற்றும் சேர்வை களுடன் வெளியேறுவது இந்த மேற்றோலின் இறந்த கலங்களின் பகுதியாகும். இந்த தோலின் மேற்பரப்பு எமது உடலில் இடத்திற் கிடம் தடிப்பாகவும் மெல்லியதாகவும் மென்மையாகவும் அமைந்திருக்கின்றது. உதாரண மாக கையின் மேற்பகுதி மென்மையா கவும் பாதத்தின் கீழ்ப்பகுதி தடிப்பா கவும் இருப்பதை நாம் காணலாம். முகத்திலும் ஏனைய பகுதிகளிலும் தோல் 1 மி.மீற்றர் அளவு தடிப்பாக இருக்கின்றது.

**2. கீழ்தோல்**

தோலின் இரண்டாம் பகுதி உடலின் சதைப்பகுதியோடு தொடர்புபட்டதாக அமைந்திருக்கின்றது.மேற்றோலில் ஏதாவது பட்டால் அவ்வளவாக வேதனை உணரப்படாவிட்டாலும், கீழ்தோல் பகுதியில் ஆழமாகப் படுகின்றபோது வேதனையை உணர முடிகின்றது. இதில் இருந்தே குருதி வெளியேறுகின்றது. குருதி நாளங்கள் இந்த கீழ்தோலின் அடிப்பகுதியுட னேயே சம்பந்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## தோலின் அமைவு

தோலின் ஒரு செ.மீற்றர் அளவு ஆழத்திற்குள் பலவகையான கலங்கள் காணப்படுகின்றன. அவையாவன;

* குருதி நாளம்
* ஒட்டிய சதை
* 3000 கலங்கள்
* உணர்வை ஊட்டும் 25 நாளங்கள்
* நோவு, வலியை உணர்த்தும் நாளங்கள் 200
* குளிரை உணர்த்தும் நாளம் 2
* உஷ்ணத்தை உணர்த்தும் நாளம் 12
* ரோம (மயிர்) கலங்கள் 10
* பல்வேறு விதமான பொதுக்கலங்கள் 3,000,000

## வெள்ளை, கறுப்பு நிறமாதல்




தோலில் காணப்படு கின்ற கலங்களில் 'மெலனின்' என்ற கலம் முக்கியமான தாகும். இந்தக் கலம் வெளிப்படுத்து கின்ற மெலனின் என்றநிறம் காரணமாக எமது தோல் பளபளப்புடன் அழகிய வடிவம் பெறுகின்றது. இந்த நிறம் சூரியக் கதிர் களினால் ஏற்படக்கூடிய பாதிப்புக் களில் இருந்து எமது உடலைப் பாதுகாக்கின்றது.

ஆனால், குளிர்ப்பிரதேச நாடுகளில் சூரிய ஒளி குறைவாக இருப்பதால், இந்த நிறம் தோலின் ஓரளவு கீழ்ப்பகு தியில் (அடியில்) காணப்படும். ஆனால், வறண்ட வலய (உஷ்ணப்) பிரதேசங் களில் இந்த நிறம் தோலின் மேல்பகு தியில் காணப்படுகின்றது. குளிர்வலய நாடுகளில் வாழும் மக்கள் வெள்ளை நிறமாக இருப்பதற்கும் உஷ்ணவலய நாடுகளில் வாழ்பவர்கள் கறுப்பு நிற மாவதற்கும் காரணம் இதுவேயாகும்.

## வியர்வைச் சுரப்பி

வியர்வையை வெளிப்படுத்தும் சுரப்பிகள் அமைந்திருப்பது தோலின் அடிப்பகுதியில் ஆகும். இத்தகைய சுரப்பிகள் 50 லட்சம் அளவில் எமது உடல் முழுவதும் உள்ளன. இவை 'வியர்வைச் சுரப்பிகள்' என்றழைக் கப்படு கின்றன. வியர்வை மூலம் உட லுக்குள் இருக்கும் திரவத் தன்மை, கழிவுகள் வியர்வையாக வெளிப்படுகின் றன. அத்துடன், இதன்மூலம் உடலின் உஷ்ணம் சமநிலைப்படுத் தப்படுகின்றது. கடுமையான உஷ்ணம் நிலவும் நாட்களில் எமது உடலில் இருந்து எம்மை அறியாமல் 2 லீற்றர் அளவான வியர்வை வெளிப்படுத்தப்படுவதாக விஞ்ஞா னிகள் கூறுகின்றனர். குளிர்ச்சியான நாட்களில் வெளியாகும் வியர்வையின் அளவு 300 மி.லீற்றர் அளவில் இருக்கும்.







## உடலுக்கு கொழுப்பைத் தரும் சுரப்பிகள்

தோலில் காணப்படும் சுரப்பிகளில் தோலுக்குத் தேவையான கொழுப்பை வெளிப்படுத்தும் சுரப்பிகளும் கலங்களும்

முக்கியமான[...]
தோலின் அடி[...]
படலங்களால்[...]
சுரப்பிகள் அ[...]
சுரப்பிகள் கெ[...]
செய்து, தோ[...]
அழகாக வை[...]
சமநிலையை[...]
உதவுகின்றன[...]
மேற்பகுதியி[...]
வெடிப்புகள்[...]
பாதுகாப்பளி[...]

ஆரோக்கியத்[...]
கொழுப்பு கா[...]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முக்கியமானவையாகும். தோலின் அடிப்பகுதியில் பல படலங்களால் சூழப்பட்டதாக இந்த சுரப்பிகள் அமைந்துள்ளன. இந்த சுரப்பிகள் கொழுப்பை சுரக்கச் செய்து, தோலின் மேற்பரப்பை அழகாக வைத்திருப்பதற்கும் உடல் சமநிலையைப் பாதுகாக்கவும் உதவுகின்றன. தோலின் மேற்பகுதியில் கீறல்கள், வெடிப்புகள் ஏற்படாதவண்ணம் பாதுகாப்பளிக்கின்றன. மனிதனின்

## உடலைப் பாதுகாக்கும் மயிர்/ரோமம்

தோலின் மேற்பரப்பில் 1 கன செ.மீற்றருக்குள் 10 ரோமங்கள் என்ற அளவில் வளர்கின்றன. இவ்வாறாக






**‘கடுமையான உஷ்ணம் நிலவும் நாட்களில் எமது உடலில் இருந்து எம்மை அறியாமல் 2 லீற்றர் அளவான வியர்வை வெளிப்படுவதோடு, குளிர்ச்சியான நாட்களில் 300 மி.லீற்றர் அளவில் வியர்வை வெளிப்படுகின்றது’**



உடல் முழுவதுமாக ரோமங்கள் வளர்கின்றன. பொதுவாக ஒருவரின் உடலில் இவ்வாறாக 30 ஆயிரம் கோடி ரோமங்கள் இருப்பதாகக் கணிப்பிடப்பட்டிருக்கின்றது.


## சருமமானது விற்றமின் D யை உற்பத்தி செய்யும் முறை

தோலின் பல்வேறு பகுதிகளால் எமது உடலின் ஆரோக்கியத்திற்குத் தேவையான





விஞ்ஞா
ச்சியான
ர்வையின்
ில்
ைபைத்
ள்
பிகளில்
ும்

ஆரோக்கியத்திற்கும் பளபளப்புக்கும் கொழுப்பு காரணமாக அமைகின்றது.




தோலின் மேற்பரப்பில் ரோமங்கள் வளர்வதற்கும் இது காரணமாகின்றது.

## தோலின் குறுக்குவெட்டுமுகம்




பல சேவைகள் நடைபெறுகின்றன. இதில் விற்றமின் D யை உற்பத்தி செய்வது முக்கியமான சேவையாகும். உணவுகளின் ஊடாக உடலுக்கு விட்டமின் D மிகவும் குறைவாகவே கிடைக்கின்றது. ஆனால், விற்றமின் D தோலின் மேற்பகுதியில் இயல்பாகவே உற்பத்தியாகின்றது.

சூரியஒளி தோலினுள் புகும்போது தோலின் கீழ்பகுதியில் உள்ள கலங்களில் தேங்கிக் காணப்படுகின்ற ‘அர்ஜஸ்டரோல்’ எனும் ‘ஸ்டெரோய்ட்’ மீது சூரிய ஒளி பதிவாகும்போதே விற்றமின் D உற்பத்தியாகின்றது. உடலில் சதைப்பகுதி எலும்புகளின் வளர்ச்சிக்கும் உடல் நலிவடைதல் நோய் ஏற்படாமல் இருப்பதற்கும் விற்றமின் D அவசியமாகின்றது.

## தோலைப் பாதிக்கும் நோய்கள்







கடுமையான சூரியஒளி புகும்போது தோலானது வறண்டு விடுகின்றது. அப்போது தோலில் நீர்க்கொப்புளங்கள் ஏற்படுகின்றன. அதிக சூரியஒளி தோலுக்குள் புகுவதால், புற்றுநோய்கள் ஏற்படவும் வாய்ப்பாக அமைகின்றது. அதிகமாக அமிலத்தன்மை உள்ள உணவுகளான அன்னாசி, தக்காளி போன்றவற்றை உண்ணும் போதும் சிலரின் உடம்புக்கு அவை ஒவ்வாத போது தோலில் காயங்கள் ஏற்படுகின்றன.

சிலருக்கு றப்பர் பாதணிகளை அணிவதாலும் காயங்கள் ஏற்படுகின்றன. இவ்வாறான பாதிப்புக்களால் தோலில் தழும்புகள், வெள்ளைப்புள்ளி மற்றும் எக்சிமா உட்பட தோல் நோய்கள் ஏற்படுகின்றன. பலவீனமான தோலை உடையவர்களுக்கு குறிப்பிட்ட சில உணவு வகைகளும் மருந்து வகைகளும் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைகின்றன. சொறி, சிரங்கு, குஷ்டம், தழும்புகள் என்பனவும் சருமத்தில் ஏற்படக்கூடிய இன்னும் சில நோய்களாகும்.

தோலை வைரஸ்கள் தாக்கும்போது உன்னிகள் உருவாகின்றன. சில உன்னிகள் உருவாகி, காலப் போக்கில் மறைந்துவிடுகின்றன. இன்னும் சில நிலைத்துவிடுகின்றன. இவற்றை சத்திரசிகிச்சை மூலமோ, களிம்பு (கிரீம்)களைப் பூசுவதன் மூலமோ நீக்கிவிட முடியும். இவை வைத்தியரின் ஆலோசனைகளுக்கமையவே நடைபெற வேண்டும்.

- (ஆ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தியுள்ள சிறுவன்

ஓர் ஊரில் சுரேஷ் என்ற சிறுவன் ஒருவன் இருந்தான். அவன் மிகுந்த புத்திசாலி. படிப்பிலும் கெட்டிக் காரன். சிறுவயதிலேயே அவனது தந்தை இறந்து விட்டார். சுரேஷுக்கு எல்லாமே அவனது தாயார்தான். சுரேஷ் தாயிடம் கேட்காமல் எதையும் செய்யமாட்டான்.

ஒருநாள் சுரேஷ் அம்மா கொடுத்த 500 ரூபா தாளுடன் சாமான்கள் வாங்கக் கடைவீதிக் குச் சென்றான். அப்போது அந்த வழியால் ஒரு முரடன் வந்தான். அவன் சுரேஷிடம் இருந்த பணத் தாளைக் கண்டுவிட்டான். ஏமாற் றுக்காரனான அவனுக்கு பணத் தாளைக் கண்டதும் அதை எப்படி யும் அபகரிக்கவேண்டும் என்னும் எண்ணம் ஏற்பட்டது.

அவன் சுரேஷைப் பார்த்து "ஏய் பையா உன்னிடம் பணம் இருக்கின் றதல்லவா? அதை என்னிடம்கொடு. அதை நான் இரு மடங்காக மாற்றித் தருகிறேன்" என்று கூறி சுரேஷிடம் இருந்த பணத்தைப் பறித்தான். சுரேஷுக்கு என்ன செய்வ தென்று புரியவில்லை. அவன் அந்த முரடனின் பின்னால் சென்றான். சிறிது தூரம் சென்றவுடன் தனிமை யான ஓர் இடத்தில் வைத்து சுரேஷை ஏமாற்ற நினைத்தான். தான் அணிந்தி ருந்த மாலையை மந்திரமாலை எனக் கூறி சுரேஷிடம் அபகரித்த பணத்தை அதனால் சுற்றினான். ஆனால், பணத் தில் ஒரு மாற்றமும் ஏற்படவில்லை.

உடனே சுரேஷ் அவனிடம் தந்திர மாக "அண்ணா நாம் ஒரு போட்டி வைப்போம். அதில் நான் வெற்றி பெற்றால் நீங்கள் எனக்கு 500 ரூபா தரவேண்டும்" என்றான்.



"என்ன போட்டி?" என்று மறு கேள்வி கேட்டான் முரடன். "நான் உங்களை மூன்று தடவை முட்டா ளாக்கினால் 500 ரூபா தரவேண்டும். சரிதானா?" என்று கேட்டான். முரடனும் இதற்குச் சம்ம தித்தான். போட்டி ஆரம்பமானது.

சுரேஷ், "அண்ணா அண்ணா அங்கே பாருங்கள். பறவைகள் ஊர்ந்து செல்கின்றன" என்றான்.

"எங்கே எங்கே காட்டு பார்ப் போம்" என்றான் முரடன். "ஐயோ ஐயோ அண்ணா பறவைகள் எங்கா வது ஊர்ந்து செல்லுமா? ஒரு தடவை ஏமாந்து விட்டீர்கள்" என்றான் சுரேஷ்.

மீண்டும் போட்டி ஆரம்பமானது. "நான் படிக்கும் புத்தகத்தை என்னால் பணமாக மாற்றமுடியும்" என்றான் சுரேஷ். முரடன் "அட உண்மையா கவா? எனக்கும் அந்த மந்திரத்தை சொல்லிக்கொடு" என்றான். "அண்ணா! இரண்டாவது தடவை யும் ஏமாந்து விட்டீர்கள். எனக்கு மந்திரம் தெரியாது" என்றான் சுரேஷ். போட்டி மீண்டும் ஆரம்பித்தது. "அண்ணா உங்கள் மந்திரமாலை உண்மையான மந்திர மாலையாக மாறும்" என்றான் சுரேஷ். "எங்கே பார்ப்போம்?" என்றான் முரடன். ஆஹா மூன்றாவது தடவையும் ஏமாந்து விட்டீர்கள். பணத் தைத் தாருங்கள்" என்று கூறி சுரேஷ் பணத்தைப் பறித்துக்கொண்டு ஓடினான். வீட்டுக்குப் போய் தாயிடம் நடந்தவற்றைக் கூறினான். அவனின் தாயார் தனது மகனின் புத்தி சாதுர்யத்தை நினைத்து மகிழ்ச்சியடைந் தார்.

முஹம்மத் நஸ்ஹான்
இம்தியாஸ்,
தரம் - 6A,
ப/அல்-முர்ஷித் ம.வித்.,
சில்மியாபுர.



# கடற்குதிரை

குதிரையின் ஓட்டம் மிக வேகமானது. ஆனால், கடற்குதி ரையோ இதற்கு எதிர்மறையானது. கடலிலேயுள்ள மிகச்சிறிய மீனினம் தான் கடற்குதிரை. இதன் விஞ்ஞானப் பெயர் 'ஹைப்போ கெமிபஸ்' என்பதா கும். எனினும், இது 'சோம்பேறி மீனினம்' என்றே அழைக்கப்படுகிறது.

இந்த மீனினம் ஓரளவு குதிரையை ஒத்திருப்பதனாலேயே இது கடற்குதிரை எனப்படுகின்றது. கடற்குதிரையை வீட்டு மீன்தொட்டி களில் வளர்க்க அனேகமானோர் விரும்புவதில்லை. ஏனெனில், மற்றைய மீன் வகைகளைப் போலல் லாது இதற்கு உட்கொள்வதற்கு எப்போதும் கடற்தாவரங்களே தேவைப்படும்.


கடற்குதிரைகள் இலகுவில் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு நகராதவை. அந்தளவு சோம்பேறிகள். நீந்தும் போதும் மிகமிக மெதுவாகவே நீந்தும்.

இவை இலங்கையை அண்மித்த கடற்பிரதேசங்கள், மத்தியத்தரைக்கடல், ஆபிரிக்கக் கடற்பகுதிகள், அவுஸ்திரேலியக் கடற்பகுதிகள், மத்திய கடற்பிரதேசம், தென் அமெரிக்கக் கடற்பகுதிகள் போன்றவற் றில் அதிகமுள்ளன.

இவற்றில் 35 இனங்களுண்டு. இந்த மீனினத்தின் ஆயுட்காலம் 4 வருடங் களே. பெண் கடற்குதிரை ஒரு தடவைக்கு 100 முட்டைகளை இடும். அம்முட்டைகளைப் பாதுகாப்பது ஆண் கடற்குதிரைதான்.

என்.எப்.அய்மா,
கமு/அல்-ஹம்றா வித்.,மருதமுனை.

# அறிவியல் வல்லுனர் கலிலியோ கலிலி



பண்டைய உலகம் தந்த அறி வியல் வல்லுனர்களின் வரிசை யில் மறக்கக்கூடாத அறிவியல் அறிஞர் கலிலியோ கலிலி ஆவார். இத்தாலியில் சாய்ந்த கோபுரம் உள்ள பைசா நகரே இவர் பிறப்பிடம். 1564 பெப்ரவரி 14 இல் பிறந்த இவர் 1642 ஆம் ஆண்டு வரை உயிர் வாழ்ந்தார்.

பைசா நகரப் பல்கலைக்கழகத்தில் கணித ஆசிரியராகப் பணியாற்றிய கலிலியோ கலிலி வானியல் பற்றிய பல உண்மைகளை வெளிக்கொண்டு வந்தார். அத்துடன், அதுவரை நம்பப் பட்டு வந்த அரிஸ்டோட்டலின் கருத் துக்களையும் இவரது ஆய்வுகள் தவிடு பொடியாக்கின.

வெவ்வேறு எடையு டைய இரு பொருட்களை மேலிருந்து கீழே போட் டால் கனமான பொருள் முதலிலும் லேசான பொருள் பின்னரும் விழும் என்பது அரிஸ்டோட் டலின் கருத்து. அதைத் தகர்த்து இரண்டு பொருளும் ஒரே நேரத்தில் கீழே விழும் என்று மெய்ப்பித் துக் காட்டினார் கலிலியோ. பூமியை மையமாக வைத்து சூரியன் மற்றும் கோள்கள் சுழல்வதாகக் கூறிய அரிஸ்டோட்டலின் மற்றொரு கருத் தையும் பொய்யாக்கினார் கலிலியோ. தொலைநோக்கியைக் கண்டுபிடித்து வானியல் பற்றிய பல உண் மைகளை வெளிக்கொண்டு வந்தார்.

ஜெ.கவினயா,
இராமநாதன் இ.ம.கல்.,
கொழும்பு-04.

# விடுகதைகள்



1. மண்ணுக்குள்ளே மாணிக்கக் கற்கள். அவை என்ன?
2. விரலில் அணிந்த வினோதப் பவளம். அது என்ன?
3. பழுத்த பழங்கள் பசிக்கு உதவாப் பழங்கள். அவை என்ன?
4. வீட்டுக்குள்ளே வேட்டைப்புலி. அது என்ன?
5. உப்புப் போடாமல் உண்ணும் பண்டங்கள். அவை என்ன?
6. பூட்டிய வீட்டில் கூட்டாளித் திருடர்கள். அவர்கள் யார்?
7. பனங்கிழங்கு மூக்குப் பையன் பறக்கிறான். அவன் யார்?
8. முகிற்பந்தல் மேலே முல்லைக்கொடிகள். அவை என்ன?

## விடைகள்

1. நிலக்கடலை
2. நகம்
3. சப்பாத்திப் பழம்
4. பூனை
5. பழங்கள்
6. எலிகள்
7. நாரை
8. மின்னல்

# தருவீரா?



படபட வெனப் பறக்கும் பட்டாம்பூச்சியே
உன் சிறகுகளை எனக்குத் தருவாயா?
கூக்குவெனக் கூவும் குயிலே
உன் குரலை எனக்குத் தருவாயா?
மினுமினுக்கும் மின்மினிப் பூச்சியே
உன் ஒளியை எனக்குக் கொடுப்பாயா?
ஒற்றைக்காலில் நிற்கும் கொக்கே உன்
வெண்மையை எனக்குத் தருவாயா?
கூடித் திரியும் காகங்களே
உங்களின் ஒற்றுமையைக் கற்றுக் கொடுப்பீரா?
உயிரினங்களே உங்களின்
உயர்ந்த குணத்தைத் தாருங்கள்
வாழ்வில் உயர உதவுங்கள்!

# இயற்கை அதிசயங்கள்

| | |
|---|---|
| உயரமான நீர்வீழ்ச்சி | - கெரெபாக்குபாய் மெரு (ஏஞ்சல்) |
| பெரிய மலர் | - ரெப்லேசியா |
| உயரமான சிகரம் | - எவரெஸ்ட் |
| நீளமான நதி | - நைல் |
| பெரிய பாம்பு | - அனகொண்டா |
| பெரிய பறவை | - தீக்கோழி |
| பெரிய விலங்கு | - திமிங்கிலம் |



தொகுப்பு: எம்.எப்.எம்.சப்றான்,
தி/அல்-ஹம்றா ம.வித்., தோப்பூர்.

Digitized by Noolaham Foundation

# அறிந்ததில் அறியாதது



★ அமெரிக்காவில் உள்ள சுதந்திரதேவி சிலையின் ஆட்காட்டி விரலின் நீளம் 8 அடி.

★ சிலி நாட்டில் உள்ள'அட்டகாமா' பாலைவனத்தில் இதுவரை மழை பெய்ததற்கான பதிவே இல்லையாம்.

★ சுறா மீன்கள் சுமார் 100 ஆண்டுகள் வாழக்கூடியவை.

★ தேனீக்கள் மணிக்கு 19 கிலோ மீற்றர் தூரம் வரை பறக்குமாம்.

★ ஒக்டோபஸ் மீனினத்திற்கு மூன்று இதயங்கள் உள்ளன.

★ காண்டாமிருகத்தின் கொம்புகள் முடிகளால் ஆனவை.

★ ஏனைய நிறங்களை விடவும் நுளம்பைத் தன்பக்கம் ஈர்த்துக் கொள்ளும் சக்தி நீல நிறத்திற்கே அதிகம் உண்டு.

★ மனிதர்களுக்கும் கோலா கரடிகளுக்கும் மாத்திரமே கைகளில் ரேகைகள் உள்ளன.



# விஜய் மாணவர் கழகம்



அங்.இல: 3319

எஸ்.எம்.சபான், தரம் - 6, புனித அந்தோனியர் ஆ.கல்., பொல்கொல்ல.



அங்.இல: 3320

ஆ.மயூரகீர்த்தன், தரம் - 10, யாழ்.இ.கல்., யாழ்ப்பாணம்.



அங்.இல: 3321

எம்.அம்ஜத், தரம் - 9, மட்/அந்-நூர் தே.கல்., வாழைச்சேனை.



அங்.இல: 3322

எஸ்.ஸஹானா, தரம் - 6, பொலன்னறுவை மு.ம.கல்., பொலன்னறுவை.



அங்.இல: 3323

அ.கிருபரூபன், தரம் - 11, யா/மீசாலை வீரசிங்கம் ம.வித்., மீசாலை.



அங்.இல: 3324

கே.றுஸைக்கா, தரம்-10, பு/மதவாக்குளம் மு.ம.வித்., மதவாக்குளம்.



அங்.இல: 3325

எஃப்.அஃப்ரின், தரம் - 5, ஸைனப் கல்., புத்தளம்.



அங்.இல: 3326

ஏ.கே.சஜாத், தரம் - 10, அல்-அக்ஸா வித்., அக்கரைப்பற்று.



அங்.இல: 3327

எஃப்.ரஸ்மினா, தரம் - 2, அல்-இர்ஷாட் ம.வித்., ஹாலி-எல.



அங்.இல: 3328

எம்.அபுலைஸ், தரம் - 8, ஓட்டமாவடி ம.கல்., மட்டக்களப்பு.



அங்.இல: 3329

சு.லக்ஷி, உயர் தரம், வேம்படி ம.உ/தர பாட., யாழ்ப்பாணம்.



அங்.இல: 3330

எம்.மசூத், தரம் - 8, அல்-முபாரக் ம.கல்., மல்வானை.



அங்.இல: 3331

கி.அபிர்ஷனா, தரம் - 7, இ.ம.ம.வித்., வவுனியா.



அங்.இல: 3332

வி.நதிபா, தரம் - 4, அப்பர் கிரன்லி வித்., லிந்துல.



அங்.இல: 3333

வி.சபேஜினி, தரம் - 10, கிளிவெட்டி ம.வித்., திருகோணமலை.



அங்.இல: 3334

பு.சதுஷன், தரம் - 10, அலம்பில் றோ.க.வித்., முல்லைத்தீவு.



அங்.இல: 3335

தே.டிலைக்சி, தரம் - 8, மடுக்கரை அ.த.க.பாட., மன்னார்.



அங்.இல: 3336

எஸ்.சப்னாஸ், தரம் - 11, கு/பறகஹதெனிய தே.பாட., பறகஹதெனிய.



அங்.இல: 3337

என்.வினோத், தரம் - 11, இந்துக் கல்., ரத்மலானை.



அங்.இல: 3338

யோ.சிவராம், உயர் தரம், யா/ஹாட்லிக் கல்., பருத்தித்துறை.

# வாராந்தம் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான 'வீரோதார' பரிசுகள்




இது, வாராந்தம் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான 'வீரோதார' உற்பத்தி கல்வி உபகரணங்களை பரிசுகளாக அள்ளித்தரும் 'வீரோதார-விஜய்' குறுக்கெழுத்துப்போட்டி. இவ்வார 'விஜய்'யை வாசிக்கும்போதே இந்த போட்டிக்கான அநேக விடைகளை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கான பரிசுகளின் விபரம் வருமாறு;

★ **முதலாம் பரிசு**
ரூபா 3,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ **இரண்டாம் பரிசு**
ரூபா 2,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ **மூன்றாம் பரிசு**
ரூபா 1,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ **10 ஆறுதல் பரிசுகள்**
ஒவ்வொருவருக்கும் ரூபா 500 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்.

விடைகளை நிரப்பி-கத்தரித்து-த்பாலட்டையில் மாத்திரம் ஒட்டி 27.01.2010 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி;

**வீரோதார-விஜய்**
**குறுக்கெழுத்துப் போட்டி இல: 28**
**'விஜய்',**
**த.பெ.இல: 2037, கொழும்பு.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 க | ண் | ணீ | 2 ர் | | 3 கு |
| த | | | 4 நீ | ல | ம் |
| 5 க | தை | | | | ம |
| ளி | | 6 பொ | ங் | 7 க | ல் |
| | | ம் | | ட | |
| 8 பொ | று | மை | | 9 லை | மா |

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 26 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்

முதலாம் பரிசு
பி.நிலோஷனா,
29, முதலாம் பிரிவு,
மருதானை.

இரண்டாம் பரிசு
ஆ.மு.அத்தாஸ்,
296, அல்-ஹிலால் வீதி,
சாய்ந்தமருது-15..

மூன்றாம் பரிசு
சி.வயிரவநாதன்,
கல்லூரி வீதி,
இளவாலை,
யாழ்ப்பாணம்.

### ஆறுதல் பரிசுகள்

அகல்யா சுரேஸ்,
பிறின்ஸ் இல்லம்,
202, சின்னக்கடை,
மன்னார்.

ஏ.சீ.எம்.ரஹ்மத்துல்லாஹ்,
165, பங்கொல்லாமட,
ரத்துகோஹ, தீகல்ல.

எல்.தாட்ஷாயணி,
91,கடுமையன்குளம் வீதி,
புத்தளம்.

எம்.எச்.அன்ஷப்,
98/4, கொழபகவத்த,
திக்குவல்லை.

செ.ஜமேந்திரன்,
A3/1 சித்ரா லேன்,
கொழும்பு-05.

ஏ.கே.எம்.உமைர்,
31, தெலம்புகல்லை,
தொடங்கஸ்லந்தை.

பி.நைந்தஸ் சஞ்சய்,
47/7, வாடிவீட்டு வீதி,
கல்முனை.

எம்.என்.எப்.நிப்லா,
206, புஸ்ஸல்ல,
பறகடுவ.

வ.நிராசுகி,
394, திருநகர்,
யோகபுரம்.

எஃப்.பாத்திமா ஃபர்ஹா,
212, மிஹிந்துபுரம்,
கந்தபொல.




| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 வே | | 3 | |
| | | | | த் | |
| | | | 4 | | |
| 5 | 6 | கா | | | |
| | ட் | | 7 | | 8 |
| 9 | | | | | |

பெயர் : ..........
வீட்டு முகவரி : ..........
..........
தொலைபேசி இல : ..........
பாடசாலை : ..........
அருகிலுள்ள நகரம் : ..........
மாவட்டம் : ..........

### மேலிருந்து கீழ்

1. ஆண்டு என்றும் சொல்லலாம்.
2. பயிர்களைப் பாதுகாக்கவும் இதைப் போடுவர்.
3. இவன் பலவான் என்பர்.
6. உருண்டையான இனிப்புப் பண்டம் ஒன்று.
7. வெள்ளம் வருமுன் இது கட்டவேண்டுமென்பர்.
8. இது வருவதற்குமுன் மணியோசை வரும். (தலைகீழ்)

### இடமிருந்து வலம்

1. விஜயம் செய்பவருக்கு முதலில் வழங்கப்படும் கௌரவம்.
4. விருந்தினர் என்றும் சொல்லலாம்.
5. இது பொன் போன்றது என்பர். (திரும்பியுள்ளது)
7. தூய அன்பை இவரிடம் பெறலாம்.
9. பறவைகளின் இல்லம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேருவளை-மருதானையைச் சேர்ந்த எம்.நாஸிர்-எஃப்.ஹஸனியா தம்பதியரின் செல்வப் புதல்வன் நாஸிக் அஹமட், 10.01.2010 அன்று தனது இரண்டாவது பிறந்த தினத்தை வெகு விமர்சையாகக் கொண்டாடினார். இவரை பெற்றோர் உட்பட உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள் பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

விஜய் 'விரா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு

காத்தான்குடி-03, முஸ்தபா ஆலிம் ஒழுங்கையைச் சேர்ந்த நௌபர்-சர்ஜானா தம்பதியரின் செல்வப் புதல்வி நஸ்மத் நுஹா, 08.01.2010 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை பெற்றோர் உட்பட உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.





பாலமுனையைச் சேர்ந்த மன்சூர்-பர்ஸானா தம்பதியரின் செல்வப் புதல்வி இனாறா ஸம்ஹத், 09.01.2010 அன்று தனது முதலாவது பிறந்தநாளை வெகுவிமர்சையாகக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.


(தகவல் - பாத்திமா லுப்னா)




கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



லுக்மான் நஸார், தரம் - 8, க/அல்-மனார் ம.கல்., கல்ஹின்ன.



ஜே.ரிக்ஷா, தரம் - 5, இறம்பொடை இந்துக் கல்., இறம்பொடை.



டி.தர்ஷினி, தரம் - 10, கம்பஹா த.ம.வித்., கம்பஹா.



எஃப்.ஹிஸ்னியா, தரம் - 6, க/அக்குறனை மு.பா.ம.வித்., அக்குறனை.

★ மனிதர்களின் கண்ணீரில் ஒரு துளியை எடுத்து 6 ஆயிரம் துளி நீருடன் கலந்தால், அந்த கலப்புநீர் நூற்றுக்கணக்கான நோய்க்கிருமிகளைக் கொல்லும் சக்தி கொண்டதாக இருக்கும். மனிதர்களின் கண்ணீரில் 'லைஸோசம்' என்ற ஒருவகை ரசாயனம் ஏராளமாக இருக்கின்றது. இதுவே கிருமிநாசினியாக செயல்படுகிறது.

## ஷ்... உங்களுக்கு மட்டும்!

★ முற்காலத்தில் ரோமானிய மக்களிடம் அவர்கள் அணியும் மேலங்கிக்கு அதன் அழகிற்கு ஏற்ப வரி விதிக்கப்பட்டது. அவ்வாறே, ரோமானியர்கள் மரணத்திற்கும் வரி செலுத்த வேண்டியிருந்தனர். மரணமடைந்தவரின் இறுதி ஊர்வலம் ஆரம்பிப்பதற்கு முன் கட்டாயமாக வரி வசூலிக்கப்படும். இதுபோன்றுதான் ரஷ்யாவில் ஆண்கள் தாடிக்கு வரி செலுத்தினார்கள். வரி செலுத்தாதவர்களின் தாடியை மழிக்கவென்றே ரஷ்ய அரசு ஆட்களை நியமித்திருந்தது.

★ முகம் துடைக்க கைக்குட்டையை முதன்முதலில் பயன்படுத்திய நாடு பிரான்ஸ். அவ்வாறே, வர்ண தொலைக்காட்சியை முதன்முதலில் அறிமுகம் செய்த நாடும் பிரான்ஸ்தான்.

# மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

### எனது வீடு




நி.கேமக்ஷன், தரம் - 2, மட்/கு.கலைவாணி ம.வித்., குருக்கள்மடம்.



அ.மிதுஷா, தரம் - 5, கணபதி இ.ம.ம.வித்., கொழும்பு.

### எனது ஆசிரியர்




பாத்திமா நிஸா, தரம் - 8, அந்-நஜாத் ம.வித்., திருகோணமலை.




எம்.என்.எப்.நஸ்லியா, தரம் - 7, நல்லாயன் ம.ம.கல்., நுவரெலியா.

### ஐஸ்பழம்




வ.ஸியானி, தரம் - 3, தி/லூர்து அன்னை றோ.க.வித்., பாலையூற்று.



ஏ.எச்.எம்.சஹீருதீன், தரம் - 5, பு/பள்ளிவாசல்துறை மு.ம.வித்., பள்ளிவாசல்துறை.

### மரங்கள் நடுவோம்



த.நிறோஜன், தரம் - 10, நயினாதீவு கணேஷ க.ம.வித்., நயினாதீவு.



எ.எப்.சப்னா, தரம் - 10, தும்புளுவாவ மு.வித்., தும்புளுவாவ.

### மாட்டு வண்டி



ஆர்.சசிகுமார், தரம் - 7, இ/சீசீ த.வித்., பலாங்கொடை.



இஹ்றாஸ் மின்ஸார், தரம் - 8, மாறை/மின்ஹாத் தே.பாட., திக்குவல்லை.

### மீன் வியாபாரி



ந.டினுரயன், தரம் - 10, கொக்குவில் இ.கல்., யாழ்ப்பாணம்.



தி.நிதீபன், தரம் - 11, அச்சுவேலி ம.கல்., யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'குமண' வனவிலங்குகள் பூங்கா மீண்டும் திறந்து வைப்பு

இலங்கையின் மிகவும் புகழ் பெற்ற வனவிலங்குகள் பூங்காவாக கருதப்படுகின்ற 'குமண' தேசிய வனவிலங்குகள் பூங்கா நீண்ட இடைவேளைக்குப் பின்னர் மீண்டும் மக்களின் பார்வைக்குத் திறந்து விடப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலையின் காரணமாக மூடப்பட்டிருந்த 'குமண' வனவிலங்குகள் பூங்கா தற்போது இயல்பான சூழ்நிலை தோன்றியிருப்பதன் காரணமாக மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது கிழக்கு இதுவொரு வனவிலங்குகள் பூங்காவாக அறிவிக்கப்பட்டது. அதற்கு முன்னர் 1930 ஆம் வருடம் தொடக்கம் இதுவொரு சரணாலயமாகவே பெயரிடப்பட்டிருந்தது. காலநிலை மாற்றங்களின் காரணமாக அண்மைக் காலமாக குமண தேசிய வனவிலங்குகள் பூங்காவை நோக்கி ஏராளமான வெளிநாட்டுப் பறவைகள் வருவதாகவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதன்படி, இலங்கையில் கண்டறியப்பட்டுள்ள 464 வகைப் பறவைகளில், 200 பறவை இனங்கள் வெளிநாடுகளிலிருந்து வந்தவை என்பதும் இதில் குமண பூங்காவில் 287 பறவை இனங்கள் இருப்பதாகவும் அவற்றில் 80 பறவை இனங்கள் வெளிநாடுகளிலிருந்து வந்தவை என்பதும்

## 1930 ஆம் ஆண்டுகளில் சரணாலயமாக கருதப்பட்டுப் பின்னர் 1970 ஆம் ஆண்டுகளில்தான் வனவிலங்குகள் தேசிய பூங்காவாக இது அறிவிக்கப்பட்டது





குறிப்பிடத்தக்கது.

இந்தப் பறவைகளில் பல இமயமலைப் பகுதியிலிருந்து இந்தியா-தமிழ் நாட்டின் வழியே ராமேஸ்வரத்தின் ஊடாக இலங்கையின் கடற்பரப்பை வந்தடைந்து அங்கிருந்து மன்னார் வழியே மேற்படி குமண வனவிலங்குகள் பூங்காவை வந்தடைவதாகக் கருதப்படுகின்றது. தற்போது இந்த வனவிலங்குகள் பூங்கா மீண்டும் திறக்கப்பட்டுள்ளமையால் ஏராளமான வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பார்வையாளர்கள் இங்கு வருகை தரத்தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாகாணப் பகுதிகளில் பெய்கின்ற மழையின் காரணமாக இந்த வனவிலங்குகள் பூங்காவில் உள்ள ஆறுகள், குளங்கள் நீரினால் நிரம்பியுள்ளன. இதன் காரணமாக, பூங்காவிற்கான போக்குவரத்துப் பாதைகள் சீர்குலைந்திருக்கின்றமையால், அவற்றை சீர்படுத்தும் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

இத்தனை பிரசித்தி பெற்ற இந்த குமண தேசிய வனவிலங்குகள் பூங்காவானது 35,000 ஹெக்டேயர் நிலப்பரப்பைக் கொண்டதாகும்.1970 ஆம் ஆண்டில்தான்




## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# அறிவியல் பாடத்தில் ஆர்வத்தை செலுத்துமாறு ஒபாமா அறிவுரை

அமெரிக்க மாணவர்கள் அறிவியல் பாடங்களில் கூடிய ஆர்வத்தை செலுத்த வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அறிவுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக மேலும் தெரிவித்துள்ள அவர், கணிதம், அறிவியல் ஆகிய இரண்டு விடயங்களை அடியொட்டியே வாழ்வாதாரம் தங்கியுள்ளது. எனவே, இப்பாடங்களை அடுத்துவரும் பத்து வருடங்களில் கற்பிக்க, கற்க முக்கியத்துவம் கொடுப்பதற்கு தமது அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாகவும் குறித்த பாடங்களை கற்பிப்பதற்குத் தேவைப்படுகின்ற ஐயாயிரத்திற்கும் அதிகமான ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



கல்வி நடவடிக்கைகளுக்காக அமெரிக்க அரசாங்கம் பெருமளவு நிதியை ஒதுக்கியுள்ளதாகவும் அமெரிக்க விஞ்ஞானிகள் மாணவர்களுக்குத் தமது ஆலோசனைகளை, அனுபவங்களைத் தெரிவிக்கவேண்டும் என்றும் அத்தோடு, வருடாந்தம் அறிவியல் கண்காட்சி நிகழ்வுகள் நடத்தப்பட்டு புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கவும் திட்டமிட்டிருப்பதாகவும் ஜனாதிபதி ஒபாமா தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# ஹெயிட்டி பூகம்பத்தில் லட்சக்கணக்கில் மரணம்



**ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான ஹெயிட்டியில் கடந்த 13 ஆம் திகதி ஏற்பட்ட பாரிய பூகம்பத்தின் காரணமாக லட்சக்கணக்கானோர் மரணித்துள்ளதுடன், 30 லட்சத்திற்கும் அதிகமானோர் தமது இருப்பிடங்களையும் இழந்துள்ளனர்.**

**7 ரிச்டர் அளவில் ஏற்பட்ட இந்த பூகம்பத்தினால் தொலைத் தொடர்புகள் முற்றிலுமாகச் செயலிழந்துள்ளதால் அழிவு விபரங்கள் இன்னமும் முழுமையாக கிடைக்கப்பெறவில்லை.**

**மேற்படி பூகம்பத்தின்போது ஹெயிட்டி ஜனாதிபதி மாளிகை முழுமையாக தரைமட்டமாகிய போதிலும், அந்நாட்டின் ஜனாதிபதி தெய்வாதீனமாக உயிர் பிழைத்தமை குறிப்பிடத்தக்கது.**

**ஹெயிட்டி நாடு, கடந்த இருநூறு வருடங்களில் சந்தித்த பாரிய இயற்கை அனர்த்தமாக இது கருதப்படுகின்றது.**

# ஐரோப்பாவில் தொடரும் கடும் பனிப்பொழிவு

தொடரும் கடும் பனியின் காரணமாக ஐரோப்பிய நாடுகளில் 200 இற்கும் மேற்பட்டவர்கள் மரணமடைந்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடுமையான பனிப்பொழிவினால் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், மக்கள் தமது வசிப்பிடங்களிலிருந்து வெளியேற முடியாத அளவிற்கு அடைபட்டுக் கிடக்கின்றனர்.

இக்காலநிலை மாற்றத்தின் காரணமாக சுவிஸ் நாட்டின் 'அல்ப்ஸ்' மலையிலிருந்து பனிப்பாறைகள் உருண்டதில் அதில் சிக்குண்டு பலர் மரணமாகியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும்,பனிச்சறுக்கலுக்குச் சென்றவர்கள்,பனிப்பாறைகளில் சிக்கியவர்கள், போக்குவரத்து விபத்துக்களில் சிக்கியவர்கள், வயோதிபம் காரணமாக, காலநிலை மாற்றம் ஒவ்வாத காரணத்தினால் என இன்னும் பலர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

அண்மைக்காலத்தில் இவ்வாறான பாரிய காலநிலை மாற்றம் நிகழ்ந்திருக்காத நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள இந்த மாற்றத்தினால் பல ஐரோப்பிய நாடுகள் பெரும் இக்கட்டான நிலைக்கு ஆளாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



## அற்லஸ் கேள்வி - 239

**கேள்வி:** சுவிஸ் நாட்டின் எந்த மலையிலிருந்து பனிப்பாறைகள் உருண்டன?

சரியான விடை.......................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 239,
விஜய், த.பெ.எண் 2087, கொழும்பு.

**போட்டி இல - 237 இன் சரியான விடை: காபன்டொக்சைட்**

**பரிசு பெறுவோர்**

எஸ்.ஃபாத்திமா ஷகீலா,
175, பிதுறுவெல, உஹுமீயா.

எஸ்.ரமேஷ்குமார்,
147, மெயின் வீதி, கொட்டகலை.

கே.சுதர்சன்,
130/1, 1 ஆம் ஒழுங்கை, குட்செட் வீதி,
தோணிக்கல், வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන්
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் அனிலுக்கும் பணிப்பாளருக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

අනිල්: ආයුබෝවන් මහත්මයා.
ஆயுபோவன் மஹத்மயா.
அனில்: வணக்கம் ஐயா.

අධ්‍යක්ෂ: ආයුබෝවන්, වාඩිවෙන්න.
ஆயுபோவன், வாடிவென்ன.
பணிப்பாளர்: வணக்கம், உட்காருங்கள்.



ඔයාගේ නම මොකද්ද?
ஒயாகே நம மொகத்த?
உங்கள் பெயர் என்ன?

අනිල්: මගේ නම අනිල් ජයවීර.
மகே நம அனில் ஜயவீர.
அனில்: என்னுடைய பெயர் அனில் ஜயவீர.

අධ්‍යක්ෂ: ඔයාගේ හැඳුනුම්පත දෙන්න.
ஒயாகே ஹெந்துனும்பத தென்ன.
பணிப்பாளர்: உங்களுடைய அடையாள அட்டையைத் தாருங்கள்.

අනිල්: මෙන්න මහත්මයා.
மென்ன மஹத்மயா.
அனில்: இந்தாருங்கள் ஐயா.

අධ්‍යක්ෂ: කැඳවීමේ ලිපියත් ගෙනාවද?
கெந்தவீமே லிபியத் கெனாவத?
பணிப்பாளர்: அழைப்புக் கடிதம் கொண்டு வந்தீர்களா?

අනිල්: ඔව් මහත්මයා, මෙන්න.
ஒவ் மஹத்மயா, மென்ன.
அனில்: ஆம் ஐயா, இந்தாருங்கள்.

අධ්‍යක්ෂ: ඔයාගේ නමට කෙළින් අත්සන් කරන්න.
ஒயாகே நமட கெளின் அத்ஸன் கறன்ன.
பணிப்பாளர்: உங்கள் பெயருக்கு நேரே கையெழுத்து இடுங்கள்.

අනිල්: හොඳයි මහත්මයා.
ஹொந்தய் மஹத்மயா.
அனில்: நல்லது ஐயா.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

உதா: உங்களுடைய பெயர் என்ன?
ඔයාගේ නම මොකද්ද?

i. உங்களுடைய அடையாள அட்டையைத் தாருங்கள்.
..........................................................

ii. அழைப்புக் கடிதத்தைத் தாருங்கள்.
..........................................................

iii. இங்கே கையெழுத்து இடுங்கள்.
..........................................................






இறந்தகால தனி வாக்கியம் (Past Simple Tense) மற்றும் நிகழ்கால தனி வாக்கியம் (Present Simple Tense) ஆகிய இரண்டு வகை வாக்கியங்களிலும் காணப்படுகின்ற வினா நிலை (Interrogative) வாக்கியங்களை மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) Did Nimal go to office last Sunday?
நிமல் கடந்த ஞாயிற்றுக்கிழமை அலுவலகத்துக்குச் சென்றானா?
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஆ) Does Nimal go to office every Sunday?
நிமல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அலுவலகத்துக்குச் செல்கின்றானா?
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

---

(அ) Did Mary go to the church last Sunday?
மேரி கடந்த ஞாயிற்றுக்கிழமை தேவாலயத்துக்குச் சென்றாளா?
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஆ) Does Mary go to the church every Sunday?
மேரி ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தேவாலயத்துக்குச் செல்கின்றாளா?
(நிகழ்கால தனி வாக்கியம் - Present Simple Tense)

---

(அ) Did your dog go into the garden yesterday?
உனது நாய் நேற்று தோட்டத்துக்குள் சென்றதா?
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஆ) Does your dog go into the garden everyday?
உனது நாய் ஒவ்வொரு நாளும் தோட்டத்துக்குள் செல்கின்றதா?
(நிகழ்கால தனி வாக்கியம் - Present Simple Tense)

---

(அ) Did your father read the newspaper last night?
உனது தந்தை கடந்த இரவு பத்திரிகை வாசித்தாரா?
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஆ) Does your father read the newspaper every night?
உனது தந்தை ஒவ்வொரு இரவும் பத்திரிகை வாசிப்பதுண்டா?
(நிகழ்கால தனி வாக்கியம் - Present Simple Tense)

---

(அ) Did your mother cook meals last night?
உனது தாய் கடந்த இரவு உணவுகள் சமைத்தாளா?
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஆ) Does your mother cook meals last night?
உனது தாய் ஒவ்வொரு இரவும் உணவுகள் சமைப்பதுண்டா?
(நிகழ்கால தனி வாக்கியம் - Present Simple Tense)

---

(அ) Did your Brother stay there last night?
உனது சகோதரன் கடந்த இரவு அங்கே தங்கினானா?
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஆ) Does your brother stay there every night?
உனது சகோதரன் ஒவ்வொரு இரவும் அங்கே தங்குவதுண்டா?
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொச்சோவின் கைகால்களில் கட்டப்பட்டிருந்த தடித்த கயிற்றை அவள் ஒரு நொடிக்குள் இழுத்து அறுத்துக் கொண்ட விதமும் பெண்ணான அவள் தனித்து நின்றே ரங்கராலவின் நான்கு கையாட்களை அடித்த விதமும் பார்ப்போரை ஆச்சரியப்பட வைத்தது. அந்த வகையில், இத்தகைய அசுரவலிமை ஒரு பெண்ணுக்கு இருக்கவே முடியாது. நிச்சயம் இது கலேபண்டார எனும் பூதம் ஆவியாகி தொச்சோவின் உடம்புக்குள் புகுந்து செய்யும் சேஷ்டைகளாகத்தான் இருக்கவேண்டும் என்றும் கூறினார்கள்.

அடுத்த நாள் இரவு அயல் வீட்டு மலியதேவ காட்டில் முயல் வேட்டைக்கு அவனது ஆப்த நண்பன் பியசீலியுடன் சென்றிருந்தபோது வெகுநேரமாகியும் முயல்கள் அவர்களுக்குத் தென்படவில்லை. அதனால், இரவு முழுதும் அவர்கள் வீடு திரும்பவில்லை. விடியும்வேளைதான் தனக்கு முன்னால் ஓர் அழகான கொழுத்த முயல் ஓடுவதை மலியதேவ கண்டான். தனது வாழ்நாளிலேயே அவன் அதுபோன்ற ஒரு முயலைக் கண்டதில்லை. எனவே, அன்று வேட்டையில் எதுவுமே பிடிபடாதிருந்த ஏக்கத்தால் அதைப் பின்தொடர்ந்து ஓடினான். பியசீலியின் கண்களுக்கு அது தென்படாததால் நடுக்காட்டுக்குப் போகக்கூடாதென அவன் மலியதேவவைத் தடுத்தான். எனினும், மலியதேவவுக்கு திடீர் என ஏற்பட்ட அசுரபலம் காரணமாக பியசீலியால் மேற்கொண்டு அவனைத் தடுக்கமுடியவில்லை. இப்படி ஒரு வலிமை அவனுக்கு எப்படி வந்தது என்றெண்ணி பியசீலி திகைத்தான்.

இருவரும் கட்டிப்புரண்டு உருண்டனர். முடிவில் மலியதேவ பியசீலியை நையப்புடைத்துவிட்டு காட்டுக்குள் ஓடினான். பியசீலியும் விடவில்லை. அவன் சிறிது தூரம் ஓடிக் களைத்தபின் ஒரு பயங்கர சப்தத்தைக் கேட்டு புதருக்குள் மறைந்து கொண்டான். அங்கே அவனுக்கு முன் ஓடிய அந்த முயல் சிறிது சிறிதாகப் பெரிய உருவத்துக்கு மாறிக்கொண்டிருந்தது. அதைக் கண்டதும் பியசீலியின் உடல் வெலவெலத்து நடுநடுங்கியது. அந்த மிருகத்தின் முகம் புலி உருவமாக மாறி மலியதேவவைக் கடித்துக் குதறியது.

அதைக் கண்ட பியசீலி மயக்கமடைந்து விழுந்தான். விடிந்த பின்னர்தான் அவனுக்கு நினைவு திரும்பியது. அந்த மிருகத்தால் கடித்துக் குதறப்பட்ட நண்பனின் உடலைக் கண்டு கதறி அழுதான். சிதைந்த அந்த உடலை எடுத்து வந்து மலியதேவவின் வீட்டில் ஒப்படைத்தான். அந்தப் பிணத்தில் மூளை, ஈரல், நுரையீரல், சிறுநீரகம் யாவும் தின்னப்பட்டிருந்தன. மிருகமென்றால் சதைகளைத்தான் தின்றிருக்கும்.

**பிணத்தில் மூளை, ஈரல், நுரையீரல், சிறுநீரகம் யாவும் தின்னப்பட்டிருப்பதானது ஆவியின் வேலைதான் என நினைக்கத் தோன்றியது**



# முயல் எடுத்த பிரமாண்ட உருவம்

இப்படிக் குறிப்பிட்ட சில முக்கிய பாகங்களை மட்டுமே தேடித் தின்றிருக்காது. எனவே, இது ஒரு பிசாசின் அல்லது ஓர் ஆவியின் வேலைதான் என்று பலரும் பேசிக்கொண்டனர்.

அவர்களிடம் பியசீலி விலாவாரியாக நிகழ்ந்தவை அனைத்தையும் ஒன்றுவிடாமல் கூறிமுடித்தான். அவன் கூறக்கூற அங்கிருந்தோரின் உடல்கள் நடுநடுங்கின. எனினும், சுதுசேன, கஜபால, வனரால, தனவீர ஆகியோர் பியசீலி கூறியதை ஆட்சேபித்தனர். ''நாம் வழமையாக விறகு வெட்டச் செல்லும் காடுதானே. முப்பது வருடங்களாக அங்குதானே விறகு வெட்டுகிறோம். எந்தக் கொடிய மிருகங்களையும் இதுவரை நாம் கண்டதில்லையே. அதெப்படி பியசீலிக்கு மட்டும் புலி தெரிந்தது?'' என்று சுதுசேன வினவினான்.

''அதுதானே! சின்ன முயல் வரவரப் பெரிதாகியதாம்; முயலின் முகம் புலிமுகமாக மாறியதாம் நன்றாகத்தான் பியசீலி கதை அளக்கிறான்'' என்று கஜபால கூறினான்.

''நடுச்சாமத்தில் இவர்கள் ஏன் காட்டில் இருக்கவேண்டும்? நரிகளும் ஓநாய்களும் அக்காட்டில் இருக்கின்றன. அவற்றில் ஒன்றின் முகம்தான் பயத்தின் காரணமாகப் பியசீலிக்குப் புலிமுகம் போல் காட்சி கொடுத்திருக்கவேண்டும்'' என்று வனரால கூறினான்.

''அப்படியானால் எதற்காக முயல் சிறிது சிறிதாகப் பெரிதாகியதைத் தான் கண்டதாக அவன் கூறவேண்டும்?'' என்று கேட்டான் தனவீர.

''பியசீலியின் உடலில் காயங்கள் தெரிகின்றன. ஆகவே, இருவரும் சண்டை பிடித்திருக்கிறார்கள். முடிவில் காயப்பட்டு மலியதேவ இறந்திருக்கிறான். அதன்பின்னர்தான் மிருகங்கள் அவனது பிணத்தைத் தின்றிருக்கின்றன'' என்று உபுல்நாயன கூறினான்.

முடிவில் இவ்விடயம் நாட்டு வைத்தியர் சொமிஅப்புவிடம் சென்றது. அவர் மலியதேவவின் இறப்புக்கு பியசீலி காரணமல்ல. அவர்கள் சண்டை பிடித்திருக்கலாம். அதனால், மலியதேவ இறக்கவில்லை. அதிகம் தாக்கப்பட்டவன் பியசீலிதான் மலியதேவவின் உடற்புறத்தில் காயங்கள் எதையுமே காணவில்லை. எனவே, ஒரு கொடூரமான பிராணிதான் மலியதேவவை கொன்றிருக்கவேண்டும். அது ஏன் முக்கியமான சில பாகங்களை மட்டும் தின்றிருக்கிறது என்பதுதான் கேள்வி'' என்றார்.

உடனே மலியதேவவின் குடும்பம் பேயோட்டி ஹபு ஆரச்சியிடம் இதுபற்றி முறையிட்டனர். அப்போது, நிச்சயம் இது ஓர் ஆவியின் பழிவாங்கல்தான். இது உங்கள் குடும்பத்தில் அனைவரையுமே பழிவாங்காமல் விடாது என்று அவர் கூறினார். இதைக் கேட்ட மலியதேவவின் மனைவி ரன்மெனிகே தலைவிரிகோலமாக ஒப்பாரி வைத்து அழுதாள்.

(தொடரும்....)

# அண்ணனின் பேராசை

முன்னொரு காலத்தில் ஆழியூர் என்ற ஊரில் அண்ணன், தம்பி என இருவர் வாழ்ந்து வந்தனர். அவர்களது பெற்றோர் இறந்துவிட்டனர். இதனால், தகப்பனார் வைத்திருந்த சொத்துக்களை எல்லாம் ஏமாற்றி எடுத்துக் கொண்டான் அண்ணன்.

அத்துடன், பணக்கார வீட்டுப் பெண்ணை மணந்து மகிழ்ச்சியாக பெரிய வீட்டில் வாழ்ந்து வந்தான். தம்பியோ ஏழைப்பெண்ணான வினிதாவை மணந்து குடிசையில் வாழ்ந்து வந்தான். ஏழைப் பெண் மிகவும் நல்ல குணம் கொண்டவள். கணவன் கொண்டு வரும் வருமானத்தில் சிக்கனமாகச் செலவுசெய்து, சில கோழிகளை வளர்த்து வந்தாள். அவற்றில் இருந்து கிடைக்கும் முட்டைகளை விற்று வந்தாள்.

அண்ணனின் மனைவி சரியான ஆடம்பரப் பேர்வழி. தாம் தூம் என்று செலவு செய்வாள். கணவன் எவ்வளவு கொண்டு வந்தாலும் செலவு செய்து விட்டு அவனிடம் மேலும் பணம் கேட்டுச் சண்டை போடுவாள். ஏழைப்பெண் வினிதா வளர்த்து வரும் கோழிகளை பார்த்துப் பொறாமை கொண்டாள் பணக்காரி. அவைகளை அழித்துவிட வேண்டும் என்று துடித்தாள்.

ஒருநாள் வினிதாவுக்குத் தெரியாமல் ஆட்களை வைத்து அந்தக் கோழிகளைப் பிடித்து வந்து குருமா வைத்தாள். வீடு திரும்பிய வினிதா தன் கோழிகளைக் காணாது தவித்தாள்.பணக்காரியின் மீது அவளுக்கு சந்தேகம் வந்தது. இருப்பினும் அதைக்கேட்க முடியுமா? மிகவும் வேதனையுடன் இருந்தாள் வினிதா.

அத்துடன் தொடராக அடைமழையும் பெய்தது. ஒரு வாரமாக விறகு வெட்டச் செல்லாததால், வீட்டில் சாப்பிடுவதற்கு சிறிதுகூட உணவிருக்கவில்லை. எனவே, அண்ணனிடம் சென்று, ''சிறிது கோளக்கதிர்கள் இருந்தால் தாருங்கள் அண்ணா. நான் வேலைக்குப் போனதும் திருப்பித் தந்துவிடுகிறேன். மிகவும் பசியாக இருக்கிறது'' என்றான் தம்பி.

''ஏய்... இங்கிருந்து போய்விடு. ஒரு பிடி சோளம்கூடக் கிடையாது'' என்று சொல்லி விரட்டி அடித்தான் அண்ணன். நொந்து போய் வீடு திரும்பிய தம்பி, அன்று இரவு ஒரு கனவு கண்டான். அந்தக் கனவில், ''உன் வீட்டிற்கு அருகில் இருக்கும் மைதானத்தில் ஒரு புதையல் இருக்கிறது.போய் அதை எடுத்துக் கொள்'' என்றது ஒரு குரல். காலையில் கண்விழித்த தம்பி உடனே மைதானத்திற்குக் கிளம்பினான். தம்பி வேகமாக எங்கோ செல்வதைப் பார்த்த அண்ணன், ''தம்பி எங்கேடா போகிறாய்?'' என்று கேட்டான்.



பொய் சொல்லத் தெரியாத தம்பி உண்மையைக் கூறினான். ''இரு... இரு நான் போய் எடுத்து வருகிறேன்'' என்று வேகமாகச் சென்றான் அண்ணன். மைதானத்தில் இறந்த குதிரை ஒன்றின் உடல் கிடந்தது. அதைக் கண்டு ஆத்திரம் அடைந்த அண்ணன், அதன் நான்கு கால்களையும் வெட்டி வந்து தம்பியின் வீட்டின் முன் தூக்கி எறிந்தான்.

''இதுதான் நீ சொன்ன புதையல், எடுத்துக்கோ'' என்று கூறிவிட்டு வேகமாகச் சென்றான். தம்பிக்கு ஒன்றும் புரியவில்லை. அந்தக் கால்களை இழுத்துக்கொண்டு போய் கொல்லையில் தூக்கி எறிந்தான். அதிலிருந்து தங்கக் காசுகள் கொட்டின. மகிழ்ச்சியுடன் எல்லாக் காசுகளையும் பொறுக்கினான் தம்பி. இதை மாடியில் இருந்து பார்த்துவிட்டான் அண்ணன். ஆத்திரத்துடன் மைதானத்தை நோக்கி வேகமாக ஓடினான். அங்கேதான் குதிரையின் முழு உடலும் இருக்கிறது. ''குதிரையின் கால்களில் இவ்வளவு தங்கக் காசுகள் இருந்தால், அதன் உடம்பில் எவ்வளவு காசுகள் இருக்கும்'' என்று நினைத்து ஓடினான்.

குதிரையின் உடம்பைப் புரட்டினான். அதிலிருந்து மிகவும் அசிங்கமான புழுக்கள் கொட்டின. அதைக் கண்டதும் அருவருப்படைந்து ஏமாற்றத்துடன் வீட்டுக்கு ஓடி வந்துவிட்டான் அண்ணன். சிறிது காலத்தின் பின்னர் தம்பி பொற்காசுகளைக் கொண்டு தொழில் செய்து அண்ணனை விடப் பெரிய பணக்காரன் ஆனான். இதைக் கண்ட அண்ணன் பொறாமையால் அழிந்து போனான். பொறாமை எலும்புருக்கி நோய் போன்றது. அதற்கு இடம் கொடுத்தால் அது நம்மையே அழித்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கில் மென்பந்து கிரிக்கெட்



நாட்டின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் விளையாட்டுக் கழகங்களுக் கிடையே மென்பந்து கிரிக்கெட் போட்டிகளை நடத்துவதற்கு இலங்கை மென்பந்து கிரிக்கெட் சங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 'டுவென்டி டுவென்டி' போட்டிகளாக நடைபெற வுள்ள இந்தப் போட்டிகள் 25 மாவட்டங்களில் ஒரே சமயத்தில் நடைபெறும். இதன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் 20 கழகங்கள் போட்டியிடும். இதில் வெற்றி பெறுகின்ற முதல் இரண்டு அணிகள் மாவட்ட மட்டப் போட்டி களுக்குத் தகுதி பெறும். குறித்த மாவட்ட மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்று கூடிய புள்ளிகளைப் பெறுகின்ற இரண்டு கழகங்கள் மாகாண மட்டப் போட்டிக்குத் தகுதி பெறும். தொடர்ந்து மாகாண மட்டப் போட்டியில் வெற்றி பெறுகின்ற இரண்டு கழகங்கள் தேசிய மட்டப் போட்டி களுக்குத் தெரிவு செய்யப்படும். இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு செம்பியன் கிண்ணத்துடன், ஒன்றரை லட்சம் ரூபா பணப்பரிசும், சான்றிதழ் மற்றும் தங்கப்பதக்கமும் வழங்கப்படும்.



## ஆரம்ப விழாவில் ஷேக் ஹஸீனா

2011 ஆம் ஆண்டில் பங்களாதேஷில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளின் ஆரம்ப விழா பெப்ரவரி 17 ஆம் திகதி நடைபெற வுள்ளமை நாம் அறிந்ததே. டாக்காவி லுள்ள 'பங்கபந்து'என்ற மைதானத் தில் நடைபெறவுள்ள மேற்படி ஆரம்பவிழாவில் பங்களாதேஷின் பிரதமர் ஷேக் ஹஸீனா கலந்து கொள்வார் என்று அறிவிக்கப்பட் டுள்ளது. மேற்படி தகவலை ஐ.சி.சி. யின் தலைவர் ஹருன் லொக்கட் தெரிவித்துள்ளார். மேற்படி, உலகக் கிண்ணப் போட்டிகளை இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் அணிகள் ஒன்றிணைந்து நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.பி.எல் மீது கெய்ன்ஸ் வழக்கு



நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான கிரிஸ் செய்ன்ஸ், இந்தியாவின் ஐ.பி.எல் மீது வழக்குத் தொடர வுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐ.பி.எல் போட்டி களில் கலந்து கொண்ட போது கெய்ன்ஸ் சூதாட்டத்தில் சம்பந்தப் பட்டிருந்தமை யினாலேயே அவரை ஐ.பி.எல் போட்டிகளிலி ருந்து நீக்கியதாக ஐ.பி.எல் தலைவர் லலித்மோடி தெரிவித் திருந்தார்.

மோடியின் அந்தக் குற்றச்சாட் டின் காரணமாக தனது சுய கௌர வத்திற்கும் எதிர்கால கிரிக்கெட்டிற்கும் பாதிப்பு ஏற்பட் டிருப்பதாகத் தெரிவித்தே ஐ.பி.எல் மீது கெய்ன்ஸ் வழக்குத் தொடர வுள்ளதாக தெரிவித்துள்ளார்.

கெய்ன்ஸுக்கு அண்மையில் பயிற்சி யாளராக வருவதற்கான வாய்ப்புக்கள் வந்தன. இருப்பினும் லலித் மோடியின் கருத்தினால் அவருக்கு அந்த வாய்ப் புக்கள் கைநழுவக்கூடிய சந்தர்ப்பங்கள் எழுந் துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படு கின்றது. எனவே, இதுகுறித்துக் கவனம் செலுத்தியுள்ள கெய்ன்ஸ் ஐ.பி.எல் ஐ தடைசெய்யுமாறு ஐ.சி.சியிடம் கோரவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

### இந்திய அணியின்

## பந்துவீச்சுப் பயிற்சியாளராக வருவதற்கு டொனால்ட் விருப்பம்



இந்திய கிரிக்கெட் அணியினருக்கு பந்துவீச்சுப் பயிற்சியாளராக வருவதற்கு தாம் விரும்புவதாக தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னாள் பந்துவீச்சாளரான எலன் டொனால்ட் தெரிவித்துள் ளார்.

இங்கிலாந்தின் பிராந்திய கிரிக்கெட் அணியொன்றிற்கு பந்துவீச்சுப் பயிற்சியாளராக இருந்துள்ள டொனல்ட் 'டுவென்டி டுவென்டி' உலகக் கிண்ணப் போட்டியின்போது, இங்கிலாந்து அணிக்கு பந்துவீச்சுப் பயிற்சியா ளராக பணியாற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பின்னணியிலேயே அவர் இந்திய அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளராக வர விருப்பம் தெரிவித்துள்ளார். இந்நிலையிலேயே அவ்வணியின் பந்து வீச்சு ஆலோசகராக தென்னாபிரிக்காவின் எரிக் சைமன்ஸ் நியமிக்கப்பட் டுள்ளார்.

## பாகிஸ்தானுக்கு துடுப்பாட்டப் பயிற்சியாளர் தேவை



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் துடுப்பாட்டத் திறமையை மேம்படுத்துவதற்கு பிரத்தியேகமாக துடுப்பாட்டப் பயிற்சியாளர் ஒருவர் தேவை என்று பாகிஸ்தான் அணியின் தலைவர் மொஹமட் யூசுப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான்-அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையே நடைபெற்ற டெஸ்ட் போட்டிகளில் பாகிஸ்தான் அணி தோல்விகளைத் தழுவியமைக்கு அணியின் மோசமான துடுப்பாட்டமே காரணம் எனவும் 'டுவென்டி டுவென்டி' போட்டிகளுக்கு வீரர்கள் இசைவாக்கம் அடைந்துள்ளமையால் டெஸ்ட் போட்டிகளுக்குரிய தன்மையை உணராமல், நுணுக்கங் களைக் கையாளாமல் துடுப்பாட்ட வீரர்கள் அதிரடிப்பாணியில் துடுப் பெடுத்தாட முயற்சிக்கின்றமையே இந்த பின்னடைவுகளுக்கு காரணம் என்றும் யூசுப் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, பாகிஸ்தான் வீரர்களுக்கு பிரத்தியேக துடுப்பாட்டப் பயிற்சியாளர் ஒருவரை நியமித்தாலே இதிலிருந்து மீளமுடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


## விஜய் சந்தா விபரம்

| கொழும்பில் வசிப்போர் (நேரடியாகப் பெறுவதற்கு) | | கொழும்பிற்கு வெளியே வசிப்போர் (தபாலில் பெறுவதற்கு) | |
|---|---|---|---|
| 6 மாதத்திற்கு | ரூபா 390/= | 6 மாதத்திற்கு | ரூபா 780/= |
| 1 வருடத்திற்கு | ரூபா 780/= | 1 வருடத்திற்கு | ரூபா 1560/= |

கீழ்காணும் கூப்பனை நிரப்புங்கள். (ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது.)

பெயர் - ..................................
..................................
முகவரி - ..................................
..................................
தொ.பேசி - ..................................
பத்திரிகையின் பெயர் - ..........................

விஜய் Subscription
For 6 Months/ 1 Year
(அவசியமற்றதை வெட்டிவிடவும்)
..................................
கையொப்பம்/திகதி

மேற் காணப்படும் விபரத்திற்கேற்ப பணத்தை தபாலகத்தில் காசுக்கட்டளையாகச் செலுத்தி குறித்த காசுக்கட்டளையை மாற்றக்கூடிய தபால் கந்தோர் - Slave Island Post Office என்று குறிப்பிடவும். குறித்த காசுக்கட்டளையையும் இங்கு நிரப்பப்பட்ட கூப்பனையும் ஒன்றாக இணைத்து பதிவுத் தபாலில் எமக்கு அனுப்பி வைக்கவும்.

முகவரி:
**SUBSCRIPTION MANAGER,**
**Wijeya Newspapers Ltd.,**
**8, Hunupitiya Cross Road, Colombo-02**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2009, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



மன்/அல்-அஸ்ஹர் ம.வித்தியாலய மாணவன் ஸிராஜ் அகமட், 165 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், பசூர்-சியானி தம்பதியரின் புதல்வர் ஆவார்.



கா/நாவின்ன மு.வித்தியாலய மாணவனான எம்.அஸாம், 143 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஸுல்பிகார் அலி-முனீரா தம்பதியரின் புதல்வராவார்.



எம்.ஆமிர், 143 புள்ளிகளைப் பெற்றுள்ளார். கா/நாவின்ன மு.ம. வித்தியாலயத்தில் கல்வி கற்கும் இவர், பைரூஸ்-பௌஸுல் இனாயா தம்பதியரின் புதல்வராவார்.



க/அஷ்-ஷம்ஸ் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் எஃப்.ஷபானா, 158 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.காஸிம்- ஹலீமா உம்மா தம்பதியரின் புதல்வியாவார்.



க/கதிரேசன் இ.ம.கல்லூரி மாணவனான எம்.தனுஷ்கர்பிள்ளை, 160 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



யா/நாரந்தனை கணேச வித்தியாலயத்தில் கல்வி கற்கும் பு.விதுசா, 156 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



யூ.ஹம்ஷாந்தினி 156 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், க/கதிரேசன் இ.ம.கல்லூரி மாணவியாவார்.



வ/மதீனா வித்தியாலய மாணவனான என்.நஸீம், 142 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



க/கதிரேசன் இ.ம.கல்லூரியில் கல்வி பயிலும் ஜே.நேத்தன் ஜெரமி, 155 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



எப்.அகீலா, 146 புள்ளிகளைப் பெற்றுள்ளார். கா/நாவின்ன மு.வித்தியாலய மாணவியான இவர், அஸ்மி-முப்லிஹா தம்பதியரின் புதல்வியாவார்.



மாவ/நகரகிரி ம.வித்தியாலய மாணவனான ஸாஹிர் அஹ்மத், 155 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஏ.பாரி-ஃபவ்துல் கரீமா தம்பதியரின் புதல்வராவார்.



*யா/மாணிக்கவாசகர் வித்தியாலயத்திலிருந்து சித்தியடைந்த மாணவர்கள் தங்கள் அதிபர், ஆசிரியைகளுடன் நிற்பதையே படத்தில் காண்கிறீர்கள். (முன்வரிசை இ.வ) சி.லக்ஷிகா (168 புள்ளிகள்), க.ஆனந்தநாயகி (ஆசிரியர்), இ.இராகவன் (அதிபர்), சுமதி மகேஸ்வரன் (ஆசிரியர்), கு.நிதுர்ஷா (165 புள்ளிகள்).*

*(நடுவரிசை - இ.வ) ஆ.கெனோஷன் (166 புள்ளிகள்), சி.திலக்ஷனா (140 புள்ளிகள்), க.தர்ஷனா (150 புள்ளிகள்), சி.மிதுலா (144 புள்ளிகள்), சி.கம்ஷா (158 புள்ளிகள்), பி.வைஷ்ணவி (157 புள்ளிகள்), இ.ஷோபிகா (145 புள்ளிகள்), கெ.அகத்தியா (149 புள்ளிகள்), வே.விநோத் (157 புள்ளிகள்).*

*(பின்வரிசை - இ.வ) ரா.ஹிவேதனன் (144 புள்ளிகள்), ஜெ.மிதுர்ஷன் (159 புள்ளிகள்), சு.மதுஷன் (144 புள்ளிகள்), ரா.தர்விகன் (157 புள்ளிகள்), ச.சஞ்சித் (153 புள்ளிகள்), யோ.ரகிஷன் (159 புள்ளிகள்), பு.கஜன் (159 புள்ளிகள்).*



க/கம்பளை இ.கல்லூரி மாணவனான பே.அகேய் ஸ்ரீராம், 177 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



கொட்டகலை த.ம.வித்தியாலயத்தில் கல்வி பயிலும் பூ.லோஜனா, 168 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், பூபதிராஜா-திலகவதி தம்பதியரின் புதல்வியாவார்.



ஆயிஷா ஷஹானி 154 புள்ளிகளைப் பெற்றுள்ளார். க/பெண்கள் உ/தர பாடசாலை மாணவியான இவர், ஏ.ஸலாம்-மும்தாஜ் பேகம் ஆகியோரின் புதல்வியாவார்.



கு/பறகஹதெனிய ம.கல்லூரி மாணவியான என்.பஸ்லா, 151 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், நில்பர்-எஃப்.நிரோஷா தம்பதியரின் புதல்வியாவார்.

---


விஜய்

# கடற்கரைக் காட்சி - அகில இலங்கை சித்திரப் போட்டி - 2010

அன்பு பிள்ளைகளே,

கடந்த வருடங்களைப் போலவே இம்முறையும் 'கடற்கரைக் காட்சி' எனும் தலைப்பிலான சித்திரப் போட்டியை அகில இலங்கை ரீதியில் நடாத்துவதற்கு உத்தேசித்துள்ளோம். கடல் ஆமைகள் பாதுகாப்புத் திட்டம் இப்போட்டியை நடத்துகின்றது.

கடற்கரையோரக் காட்சியொன்றை நீங்கள் நேரில் தரிசித்து கண்ட காட்சியாக சித்திரமொன்றை வரைந்து அனுப்பவேண்டும். முட்டையிடுவதற்காக கடற்கரைக்கு வருகின்ற கடல் ஆமைகள், ஆழமற்ற கடற் பகுதிகளில் முருகைக்கற்கள் காணப்படுதல் ஆகியன உள்ளடங்கிய கடற்கரையோர சுவாத்தியத்தை வெளிப்படுத்தும் எந்தவொரு காட்சியையும் சித்திரமாக வரைந்து அனுப்பலாம்.



Columbus ZOO and Aquarium

## போட்டி விதிமுறைகள்

- ★ ஒருவர் ஒரு சித்திரத்தை மாத்திரமே அனுப்ப முடியும்.
- ★ சித்திரத்தின் அளவு 35 செ.மீற்றர்X45 செ.மீற்றர் அளவில் இருத்தல் வேண்டும்.
- ★ எந்தவொரு வர்ணப் பூச்சையும் பயன்படுத்தலாம்.
- ★ ஏற்றுக் கொள்ளப்பட்ட நடுவர் குழுவொன்றினால் பரிசுக்குரிய சித்திரங்கள் தெரிவு செய்யப்படுவதுடன், நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானதாகவும் அமையும்.
- ★ சித்திரம் வரையப்படும் தாளின் பின்புறத்தில் போட்டியாளரின் பெயர், வீட்டு முகவரி, பிறந்த தினம், பாடசாலை, பாடசாலை முகவரி, போட்டிப் பிரிவு ஆகியனவும் குறிப்பிடப்படல் வேண்டும்.
- ★ போட்டிக்கு அனுப்பப்படும் சித்திரங்கள் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பி ஒப்படைக்கப்பட மாட்டாது.
- ★ போட்டி முடிவுகள் 'விஜய்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

## சித்திரங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:

'கடற்கரைக் காட்சி' அகில இலங்கை சித்திரப் போட்டி - 2010
கடல் ஆமைகள் பாதுகாப்புத் திட்டம்,
இல-11, பெரேரா மாவத்தை,
மடதும்புர, பாணந்துறை.

## போட்டி முடிவு: 2010 பெப்ரவரி 28 ஆம் திகதி

மேலதிக விபரங்களுக்கு 077-9317619 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும். வெற்றியீட்டப்படும் சித்திரங்களின் உரிமை கடல் ஆமைகள் பாதுகாப்புத் திட்டத்திற்கு உரித்துடையதே.

### பரிசளிப்பு விழா

பரிசளிப்பு விழா மார்ச் மாதத்தில் குறிப்பிட்ட ஒரு தினத்தில் கொழும்பில் நடைபெறும்.

### பங்குபற்றக்கூடியோர்

பாலர் வகுப்பு மாணவர்கள்.
ஆரம்பப் பிரிவு 6 ஆம் ஆண்டிற்கு கீழுள்ள மாணவர்கள்.
கனிஷ்ட பிரிவு - 7, 8, 9, 10 ஆம் ஆண்டு மாணவர்கள்.
சிரேஷ்ட பிரிவு - 11, 12, 13 ஆம் ஆண்டு பிரிவு மாணவர்கள்.

### பரிசு விபரம்

அகில இலங்கை ரீதியில் தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கு பணப்பரிசு வழங்கப்படும்.

| பாலர் பிரிவு | பரிசு |
|---|---|
| 1 ஆம் இடம் | ரூபா 3,000.00 |
| 2 ஆம் இடம் | ரூபா 2,500.00 |
| 3 ஆம் இடம் | ரூபா 2,000.00 |

| ஆரம்பப் பிரிவு | பரிசு |
|---|---|
| 1 ஆம் இடம் | ரூபா 5,000.00 |
| 2 ஆம் இடம் | ரூபா 3,000.00 |
| 3 ஆம் இடம் | ரூபா 2,000.00 |

| கனிஷ்ட பிரிவு | பரிசு |
|---|---|
| 1 ஆம் இடம் | ரூபா 7,000.00 |
| 2 ஆம் இடம் | ரூபா 5,000.00 |
| 3 ஆம் இடம் | ரூபா 3,000.00 |

| சிரேஷ்ட பிரிவு | பரிசு |
|---|---|
| 1 ஆம் இடம் | ரூபா 10,000.00 |
| 2 ஆம் இடம் | ரூபா 7,000.00 |
| 3 ஆம் இடம் | ரூபா 5,000.00 |


**சான்றிதழ்:** ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தெரிவு செய்யப்படும் சிறந்த சித்திரங்களை வரைந்த நூறு பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரே மாதிரியான உருக்களில் X அடையாளமிடுக 1



## எத்தனை முக்கோணிகள் உள்ளன? 3




## சரியான சொல்லில் கோடிடுக 5

1. வரதச்சணை/ வரதட்சனை/ வரதட்சணை
2. பொல்ளாப்பு/ பொல்லாப்பு/ பொல்லாபு
3. தொன்றுதொற்று/ தொண்றுதொட்டு/ தொன்றுதொட்டு
4. மார்கழி/ மார்களி/ மார்கலி
5. சன்மார்க்கம்/ சன்மார்கம்/ சன்மாற்க்கம்

## ஒவ்வொரு கட்டத்தினுள்ளும் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு ஏற்ப விடையளியுங்கள் 4

1) Circle 4 Snow Flakes




2) Circle 2 Snowmen




3) Circle 3 Turkeys



4) Circle 5 Pilgrim Hats




5) Circle 4 Scarves



6) Circle 7 Ice Skates



7) Circle 7 Pumpkins



8) Circle 2 Pieces of Pie






தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2010.01.27 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 244**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## அறிவுக்கு விருந்து 241 விடைகள்

**போட்டி: 3**
1) tulips
2) ladybug
3) rainbow
4) flowers
5) chick
6) rabbit
7) butterfly
8) robin

**போட்டி: 5**
1-7, 2- 3, 3- 2, 4- 8, 5- 5, 6- 1, 7- 6, 8- 4 என்ற ஒழுங்கில் கதையை அமைக்கலாம்.

**போட்டி: 4**
1. குறைகுடம் தளும்பும் ; நிறைகுடம் தளும்பாது.
2. கேடு வரும் பின்னே, மதி கெட்டு வரும் முன்னே.
3. தம்பி உடையான் படைக்கு அஞ்சான்.
4. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
5. கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா?

## வழி காட்டுங்கள் 2



## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 241 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
கோ.விஷாலன், தரம் - 2,
வெஸ்லி உ/தர பாட., கல்முனை.

**போட்டி: 02**
எம். சிப்கான், தரம் - $5^{E}$,
ஸாஹிரா ஆ.பாட., புத்தளம்.

**போட்டி: 03**
க. சௌஜன்யா, தரம் - $6^{V}$,
வின்சன்ற் ம.உ/தர.பாட., மட்டக்களப்பு.

**போட்டி: 04**
பி. உகாஷினி, தரம் - 5,
பாக்கியம் தே.கல்., மாத்தளை.

**போட்டி: 05**
அஷ்பாக் ஜாவீத், தரம் - $6^{A}$,
கமு/ அல்-மனார் ம.கல்., மருதமுனை.

### பாராட்டுப் பெறுவோர்

- வி.அமிர்தாம்பிகை, தரம் - 9, இந்து ம.கல்., யாழ்ப்பாணம்.
- எஸ்.கோகுலன், தரம் - 8, ரஜவல்ல இ.தே.கல்., திகன.
- எம். மௌலானா, கறுவாத் தோட்டம், தர்கா நகர்.
- சு.சிவதாரணி, மஸ்கெலியா.
- சி.சாதனா, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வித், சாவகச்சேரி.
- ஜெ.அனுஷியா, தரம்- 12, ஆர்.எச்.எல்.சி, கொழும்பு.
- எம்.ஹகீம், தரம் - 9, ஸாஹிரா ஆ.கல்., கண்டி.
- அஸ்ரா ஹஸன், சம்மாட்டி வாடி, கற்பிட்டி.
- எம்.எச். ஸலாஹ், குருநேகொட, கொடியாகும்புர.
- ஆர். ஸபீர், கனேவல்பொள, கெகிராவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலிக்காய்ச்சலின் விளைவுகள்

"ஹர்ஷன் நாம் ஏரிக்கரைக்கு நீந்தச் செல்வோமா?"

"ஐயோ வேண்டாம்"

"ஏன்? நீ வரவில்லையா?"

"இப்பொழுது எலிக்காய்ச்சல் பரவி வருகின்றதாம். அதனால், ஏரிக்கரைக்குக் குளிக்கச் செல்வது நல்லதல்ல"

"உனக்கு எப்படி அதுபற்றித் தெரியும்"

"எமது கிராமத்தின் சுகாதார அதிகாரி எனக்கு அது பற்றிய துண்டுப் பிரசுரம் ஒன்றைக் கொடுத்தார். இதோ நீயும் இதனை வாசி"

## எலிக்காய்ச்சல் என்றால் என்ன? (லெப்டோஸ்பைரோ)

எலிக்காய்ச்சல் என்பது 'லெப்டொஸ்பைரா' எனும் பக்றீரியாவினால் ஏற்படும் நோயாகும். இந்தக் காய்ச்சலை பல பெயர்களில் அழைப்பர். நாய்கள்,பூனைகள் ஆகிய வீட்டுப்பிராணிகள் மற்றும் பண்ணைகளில் வளர்க்கப்படும் விலங்குகளினால் இந்த நோய் பரவுகின்றது. பிரதான நோய்க் காவி எலியாகும். இதனாலேயே அதனை 'எலிக்காய்ச்சல்'என்று கூறுவர். மேற்கூறப்பட்ட விலங்குகளின் சிறுநீரகங்களில் இந்த பக்றீரியா இயற்கையாக உருவாகி விடுகின்றது. இவற்றின் சிறுநீரினால் இந்த பக்றீரியா சூழலில் கலக்கின்றது.

## எலிக்காய்ச்சல் ஏற்படும் விதம்

லெப்டொஸ்பைரா பக்றீரியா உள்ள சிறுநீர் கலந்த நீர் மற்றும் உணவை உட்கொள்வதனால் இந்த பக்றீரியா எமது உடலுக்குள் சேர்கின்றது. அதேபோல் உடலில் உள்ள காயங்களினாலும் மூக்கு, வாய், கண்களில் உள்ள மென்சவ்வுகளின் ஊடாகவும் இந்த பக்றீரியா உடலுக்குள் பரவுகின்றது.

## நோய் அறிகுறிகள்


பக்றீரியா உடலுக்குள் சென்ற 5 முதல் 14 தினங்களில் நோய் அறிகுறிகள் வெளிப்படும்.அதிக காய்ச்சல்,தலைவலி, தசைப் பிடிப்பு (குறிப்பாக கால்பகுதி, முதுகு), கண்கள் சிவப்பாகுதல் மற்றும் வாந்தி என்பன பிரதான நோய் அறிகுறிகளாகும். இவற்றைத்தவிர, கண்கள் மஞ்சள் நிறமாதல், வயிற்றுவலி மற்றும் வயிற்றோட்டம் என்பனவும் ஏற்படக்கூடும். இந்த எலிக்காய்ச்சலுக்கு உரிய நேரத்தில் உரிய சிகிச்சைகள் அளிக்கப்படாவிடின் சிறுநீரகங்கள் செயலிழப்பு, இதயப் பாதிப்பு என்பன ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்படக்கூடும். எனினும் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு எலிக்காய்ச்சல் பரவ மாட்டாது.



## நோய் அதிகம் பரவுவது

இலங்கையில் எலிக்காய்ச்சல் பற்றி வருடம் முழுவதும் அறியக்கூடியதாகவுள்ளது. பருவமழை காலத்தின் போதே இந்த நோய் அதிகம் பரவுகின்றது. அதாவது, மார்ச் முதல் மே வரையும், ஒக்டோபர் முதல் டிசம்பர் வரையான காலப் பகுதியில் எமது நாட்டில் அதிகம் எலிக்காய்ச்சல் ஏற்படுகின்றது. இந்த வகை பக்றீரியாக்கள் ஈரலிப்பான சூழலில் சுமார் ஒரு மாதகாலம் வரை உயிர்ப்புடன் இருக்கும். அதனால், மழைக் காலங்களில் நிரம்பும் நீர்நிலைகள் மற்றும் வயல் மற்றும் சதுப்பு நிலங்களில் இந்த பக்றீரியாக்கள் பரவும் தன்மை அதிகமாக இருக்கும். இதனாலேயே மழைக் காலங்களில் எலிக்காய்ச்சல் நோயாளிகள் எண்ணிக்கை அதிகரிக்கின்றது.

இது எமது நாட்டில் மட்டும் காணப்படும் நோயல்ல. உலகில் பல்வேறு நாடுகளில் இந்நோய் காணப்படுகின்றது. 1953 ஆம் ஆண்டே இந்நோய் பற்றி முதன்முதல் இலங்கையில் அறியப்பட்டது.




## எலிக்காய்ச்சலில் இருந்து பாதுகாப்புப் பெறுதல்

* வயல் மற்றும் அதனை அண்டிய பகுதிகளை சுத்தமாக வைத்திருத்தல்
* குப்பைகளை அகற்றி வீட்டையும் அதனை அண்டிய பகுதிகளையும் சுத்தமாக வைத்திருத்தல்.
* வயல் மற்றும் சதுப்பு நிலங்களில் வேலை செய்யும் போது கையுறைகளையும், காலுறைகளையும் அணிதல், கால்களில் கைகளில் காயங்கள் இருப்பின் அவற்றை நன்கு மறைத்து விடல்.
* நீர் ஏரிகளில் மற்றும் மழைநீர் தேங்கியிருக்கும் இடங்களில் விளையாடுதலைத் தவிர்த்துக்கொள்ளல்.
* வயல் மற்றும் அதனை சார்ந்திருக்கும் ஏரிகளில் குளித்தல், கைகள், கால், முகம் கழுவுதல் என்பனவற்றைத் தவிர்த்துக்கொள்ளல்.
* கொதித்து ஆறிய நீரை அருந்துதல்.
* ஆற்றில் இறங்குவதைத் தவிர்த்தல்.

## எலிகள் பெருகுவதனைக் கட்டுப்படுத்துவோம்

எலிக்காய்ச்சலின் பிரதான நோய்க் காவி எலியாகும். எலிகள் பெருகுவதனைக் கட்டுப்படுத்துவதன் ஊடாக எலிக்காய்ச்சல் பரவுவதனையும் தடுக்க முடியும். எலிகள் பெருகுவதனைக் கட்டுப்படுத்த பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றலாம்.



எலிக்காய்ச்சலினால் கண்கள் மஞ்சள் நிறமடைந்திருத்தல்



சிறுநீரகங்களில் பக்றீரியா இருக்கும் விதம்



லெப்டொஸ்பைரா பக்றீரியா

* எலிப்பொந்துகளை அழித்துவிடல்.
* எலிகள் பெருகும் இடங்களை அழித்தல்.
* எலிகளை உட்கொள்ளும் சாரைப்பாம்புகள், உடும்பு போன்ற ஊர்வன இனங்களை அழிப்பதைத் தவிர்த்துக்கொள்ளல்.
* ஆந்தைகள் போன்ற எலிகளை உட்கொள்ளும் பறவையினங்களை வயல்களில் அதிகம் நடமாடச் செய்ய ஏதுவான வகையில் அவற்றுக்கான உணவுகளை வைத்தல்.

## நீங்கள் வசிக்கும் பகுதிகளில் எலிக்காய்ச்சல் பரவுகின்றதாயின்...

உரிய தருணத்தில் உரிய மருந்துகளை உட்கொள்வதன் ஊடாக நோயிலிருந்து குணமடையமுடியும். எனவே, முன்னர் கூறியவாறு நோய் அறிகுறிகள் உள்ளவர்கள் உரிய வைத்திய சிகிச்சைகளைப் பெறுவது



அவசியம். வயல்களில், பண்ணைகளில் பணியாற்றிய விபரங்களை வைத்தியரிடம் தெரிவிப்பது அவசியமாகும். டொக்சிசைக்ளின் எனும் நோய் எதிர்ப்பு மருந்து எலிக்காய்ச்சலுக்கு எதிரான நோய் எதிர்ப்புச் சக்தியினை ஊக்குவிக்கின்றது. எலிக்காய்ச்சல் ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளவர்கள் இந்த மருந்தை சுகாதார அதிகாரியிடம் பெறலாம்.

## எலிக்காய்ச்சலை சரியாக இனம் காணல்

மேற்கூறிய நோய் அறிகுறிகள் ஊடாக எலிக்காய்ச்சலை அறிந்து கொள்ள முடியும்.அத்துடன், சிறுநீர் பரிசோதனை, இரத்தப் பரிசோதனையும் நோயை சரியாக இனங்காட்டும்.

## இலங்கையில் எலிக்காய்ச்சலின் தரவுகள்


| ஆண்டு | நோயாளிகள் | மரணம் |
|---|---|---|
| 2004 | 2243 | 16 |
| 2005 | 1447 | 33 |
| 2006 | 1550 | 40 |
| 2007 | 2198 | 34 |
| 2008 | 7421 | |
| 2009.08.24 | 2227 | 82 |

2008 ஆம் ஆண்டிலேயே எலிக்காய்ச்சல் நோயாளிகள் பெருமளவில் காணப்பட்டனர். அவ்வாண்டில் அடிக்கடி ஏற்பட்ட மழை மற்றும் வயல்கள் நீரினால் நிரம்பியமை என்பன நோய்க்கான காரணங்களாக அமைந்தன.









நோய் ஏற்படக்கூடிய
பண்ணை விலங்குகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இயர்ஃபோனின்' அதிக சத்தம் காதை செவிடாக்கிவிடும்

கைத்தொலைபேசியில் பேசும்போதோ அல்லது 'எம்பி' பிளேயரில் பாடல்களைக் கேட்கும்போதோ சிலர் 'இயர்ஃபோன்' (Earphone) பாவிப்பதுண்டு.

இத்தகைய இயர்ஃபோனில் வெளிப்படுகின்ற ஒலியின் அளவை ஒரு மட்டுப்படுத்தப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட அளவில் வைப்பதற்கு சர்வதேச சட்டவிதிகளை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை ஐரோப்பிய சங்கம் மேற்கொண்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்த சட்டதிட்டம் வகுக்கப்பட்டால் அதிக சத்தத்தைக் கொண்ட இயர்ஃபோன்கள் தடைசெய்யப்படக்கூடிய ஏதுநிலை









உள்ளது. பாவனையாளர்களின் எதிர்கால நலன்கருதியே இந்த முடிவை மேற்கொள்ளவுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

அதாவது, அளவிற்கு மிஞ்சிய அளவில் சத்தத்தைக் கூட்டியவாறு பாடல்களைச் கேட்பவர்கள் வயதாகையில் செவிட்டுத்தன்மைக்கு ஆளாவர் என்று கண்டறியப்பட்டுள்ளது. எனவே, தற்போதே இதற்கான தற்காப்பு வழிமுறைகளை மேற்கொள்வது இன்றியமையாதது என்று உணரப்பட்டுள்ளது.

ஐரோப்பிய சங்கம் மேற்கொண்ட ஆய்வின்படி, இவ்வாறு இயர்ஃபோனில் சத்தத்தை அதிகரித்து பாடல்களைக் கேட்போரில் ஒரு கோடிக்கும் அதிகமான ஐரோப்பியர்கள் ஏற்கனவே செவிட்டுத் தன்மைக்கு ஆளாகியுள்ளனர் என்று தெரியவந்துள்ளது. அதுமட்டுமல்ல, இயர்ஃபோனில் கூடிய சத்தத்துடன் பாடல்களைக் கேட்டவர்களில் பத்துப்பேருக்கு ஒருவர் என்ற வீதத்தில் ஏதோவொரு செவிக்கோளாறுக்கு ஆளாகியிருப்பதும் தெரியவந்துள்ளது.

எவரேனும் ஒருவர் ஒரு நாளைக்கு ஒரு மணித்தியாலம் என்ற கணக்கில் இயர்ஃபோனில் சத்தமாக பாடலைக் கேட்பவராக இருந்தால் ஐந்து வருடங்களில் அவர் நிரந்தரமாக காது கோளாதவராக மாறிவிடக்கூடிய அபாயம் இருப்பதாகவும் ஐரோப்பிய சங்கம் மேற்கொண்ட ஆய்வின்மூலம் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஒலியின் வீச்சானது டெஸிபல் (db-decibles) முறையிலேயே அளக்கப்படுகின்றது. உலக சுகாதார நிறுவனத்தின் கணிப்பின்படி காதுகளுக்கு சேதத்தை ஏற்படுத்தாத வரையறையாக இருப்பது 85 டெஸிபல் ஒலியாகும். அதன்படி 85 டெஸிபல்லுக்கு அதிகமான சத்தத்துடன் பாடல்களைக் கேட்போருக்கு காதுகளில் பாதிப்பு ஏற்படலாம். இதிலும் ஒரு தீர்க்கமான அளவை மேற்கொண்டு இனிமேல் தயாரிக்கப்படுகின்ற இயர்ஃபோன்களில் குறித்த வரையறை செய்யப்பட்ட ஒலித்திறன் மட்டுமே கொண்டவையாக அவற்றை தயாரிப்பதற்கே திட்டமிடப்படுகின்றது. அதாவது, விரும்பியோ, விரும்பாமலோ எவரும் நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட கூடிய சத்தத்துடன் இயர்ஃபோனைப் பாவிக்கமுடியாத வகையில் ஒலித்திறன் குறைக்கப்பட்டவையாக இனிவரும் இயர்ஃபோன்கள் அமைந்திருக்கும்.

இதற்கமைய, இயர்ஃபோனில் பாடல்களைக் கேட்பது கூடாது என்று அர்த்தமல்ல; மாறாக அதிகரித்த சத்தத்துடன் செவிமடுப்பதுதான் கூடாது என்று ஆராய்வுகள் தெரிவிக்கின்றன.



இயர்ஃபோன்களில் ஒலித்திறனைக் குறைப்பதற்கான சட்டதிட்டங்களை வகுப்பதில் ஐரோப்பிய சங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2010, ஜனவரி மாதம் 20 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday January 20, 2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org